லண்டனில் உள்ள பிள்ளையார் கோயில்களில் சிவனை பரிவார மூர்த்தியாக பல இடங்களில் வைத்துள்ளனர். இது சைவ சமயத்துக்கு தவறான ஒரு செயல். கட்டுரை அடுத்த இதழில்

February 2007

# தமிழர் தகவல் இலண்டன்

# Tamils' Information







தமிழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் பதிய தலைவர் நாக. சிறிகெங்காதரன்



நினைவில் வாழும் திருநாவுக்கரசு அவர்கள்

மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest

இலண்டனில் தரமான தங்கத்திற்கு

# LAKSHMIS
## JEWELLERS





276 High Street North
London E12 6SA UK
Tel : 020 8470 5600
Fax : 020 8470 3448



பிரமாண்டமாய் !
பிரமாண்டமாய் !

# Vaani
## Cash & Carry

விரைவில்

தயாரிப்பாளரிடம் இருந்து நேரடியாக

வாடிக்கையாளருக்கு

# தமிழர் தகவல் Tamils' Information

திருவள்ளுவர் ஆண்டு 2037
விய - மாசி

மலர் : 04

இதழ் : 44
பெப்ரவரி 2007


" பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்." - குறள்

## மரண பயத்தில் தலைநகர்த் தமிழ்மக்கள்

என்ன நடக்குமோ ! ஏது நடக்குமோ ! என்ற அச்சத்தில் கொழும்பிலுள்ள தமிழ் மக்கள் வாழ்கின்றனர். பல குடும்பத்தினர் தமிழ் நாடடை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. என்றுமில்லாதவாறு தமிழ் மக்கள் கடத்தப்படுகிறார்கள். காணாமல் போகிறார்கள். கடத்தப்பட்டவர்களிடம் இருந்து கோடி கோடியாகப் பணம் பறிக்கப்படுகிறது. கொழும்பில் தொடர்ந்து தமிழ்மக்கள் வாழ முடியுமா என்ற கேள்விக்குறி ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. கொழும்பிலிருந்து வரும் நண்பர்கள் சொல்லும் கதையைக் கேட்கும் போது தமிழர் தகவல் ஆழ்ந்த கவலையை அடைகிறது. எந்தக் காலமும் கொழும்பு, தமிழ் மக்கள் வாழ்வதற்கேற்ற இடம் இல்லை என்று காலஞ்சென்ற சுயாட்சிக் கட்சித் தலைவர் நவரத்தினம் அவர்கள் சொன்னதை ஞாபகப்படுத்த வேண்டி உள்ளது. எங்கள் பொருளாதாரத்தை அழித்து எங்களை மீளா அடிமைகளாக்க என்றுமில்லாதவாறு சிங்கள அரசு திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது. அண்மையில் லண்டனுக்கு வந்த தமிழ் அன்பர்கள் பலர், கொழும்பில் தொடர்ந்து தங்களால் இருக்க முடியுமா என்ற கேள்விக்குறியை எழுப்பியுள்ளார்கள். ஆகவே கொழும்பு வாழ் தமிழர்கள் தங்கள் பாதுகாப்பை கருத்தில் கொண்டு முன் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய தருணம் இது. இந்தச் சூழ்நிலையில் அடுக்குமாடி வீடு கட்டி எங்கள் பொருளாதாரத்தை உறிஞ்சும் தமிழ் முதலாளிமார் இதைப் பற்றிச் சிந்திப்பார்களா ? கொழும்பில் முதலீடு செய்பவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமல் பயத்துடன் வாழ்வது அறியக் கூடியதாய் இருக்கிறது.

பதிப்பாசிரியர்


முகவரி :
41, HADDINGTON ROAD,
BROMLEY,
KENT BR1 5RG, U.K.

தொலைபேசி :
020 8480 3320

Email :
tamilarthakaval@yahoo.co.uk

வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
இலண்டன்
Thirumurugan Arivagam
London

ஆசிரியர் :
அரவிந்தன்
Editor :
Aravindan

கணினி, அச்சுப்பதிப்பு :
தமிழர் தகவல்

Computering & Printing :
Thamizhar Thagaval



படைப்புகள்
ஆக்கியோரின்
உரிமைகளே



4000 பிரதிகள்

# நான் கண்ட பரதம்






ஒரு விஷயத்தை எழுதும்போது நமக்குத் தெரிந்த செய்தியை எழுதவேண்டும் என்று கட்டாயமில்லை. பலபேர் சொன்னதைக் கேட்டு அந்த கருத்துக்களை கொண்டுவருவதும் ஒரு பாணிதான்.

எனது மனத்தில் நீண்ட காலமாக உறுத்தி கொண்டிருந்த ஒரு விடயத்தை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். பரத நாட்டியக் கலை, பழம் பெருமை வாய்ந்த ஒரு கலை. வேறு எந்தக் கலையிலும் இல்லாத ஒரு பெரிய சிக்கல் இந்தப் பரதக் கலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. அந்தக் காலங்களில் (1967 - 1970) குமாரி கமலாவின் பரதம் அண்ணாமலை மன்றத்தில் நடைபெறும். இது இசை விழா முடிந்த தை மாதம் முதலாம் தேதி நடைபெறும் நிகழ்ச்சியாகும். மேலும் பத்மினி, வைஜெயந்தி மாலா, குசல குமாரி போன்றோரின் நடனங்களும் நடப்பது உண்டு. இவர்களுடைய பரத நாட்டியத்தை நான் பலமுறை பார்த்திருந்தாலும் அதைப் பற்றி எனக்கு ஒன்றுமே புரிவதில்லை. அது அன்று மட்டுமல்ல, இன்றும்தான். ஆனாலும் சில பேருடைய ஆட்டத்தை, பரதக் கலை பற்றிய எந்த விதமான அறிவும் இல்லாத போதும் கூட ரசிக்க முடியும். அப்படி நானும் எனது மனைவியும் ரசித்த ஒரு நிகழ்ச்சி 1971 மார்ச் மாதம் ராஜா அண்ணாமலை மண்டபத்தில் நடைபெற்ற செல்வி ஜெயலலிதாவின் காவிரி தந்த கலைச்செல்வி நாட்டிய நாடகம். நான் ரசித்த மற்றொரு நாட்டிய நிகழ்ச்சி அமிர்தலிங்கம் அவர்கள் தலைமையில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த அங்கயற்கண்ணி வேதநாயகம் அவர்களின் அரங்கேற்றம். இந்தவிதமாக நூற்றுக் கணக்கான நிகழ்ச்சிகளைப் பார்த்துள்ளேன். குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் எனது நண்பரும் கொழும்பு அரசன் பிரிண்டர் உரிமையாளருமான திரு திருநாவுக்கரசு அவர்களின் இரட்டைக் குழந்தைகளின் (பிரேமனி, தர்ஷினி) அரங்கேற்றத்தை மிகவும் ரசித்தேன். அந்த இரட்டைக் குழந்தைகள் அகில இந்திய பல்கலைக் கழக பரதநாட்டியப் போட்டியில் முதல் பரிசு பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் பரத நாட்டியக் கலை பெரிதாக இல்லாத போதும் வசதி படைத்த மாணவிகள் சென்னைக்கு வந்து ருக்மணி அருண்டேலின் கலாஷேத்ராவில் படித்துவிட்டு யாழ்ப்பாணத்தில் வகுப்புகள் நடத்துவார்கள். யாழ்ப்பாணத்தில் நான் இருந்தபோது பரதம் பெரிய அளவில் புகழ் பெற்றதாய் இருந்ததில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில நிகழ்ச்சிகள் நடைபெறும். அப்போது கூட பரத நாட்டிய நுணுக்கங்களை நான் அறியேன். இன்றைக்குப் புலம் பெயர்ந்த நாடுகளில் பரத நாட்டியம் ஒரு குடிசைத் தொழிலாகவே மாறிவிட்டது. அதைவிடப் பல பாடசாலைகள் அரசாங்க பணத்தை உதவியாக பெற்றும் வகுப்புகளை நடத்துகிறார்கள். இவைகள் நல்ல ஒரு முயற்சிதான். ஆனால் திறமையானவர்களைக் கண்டுபிடித்து, திறமையானவர்களை நியமித்து பரதநாட்டியத்தை கற்பிக்கவேண்டும் என்பதுதான் எனது விருப்பம். இப்போதும் திறமையானவர்கள் சிலர் லண்டனில் இல்லாமல் இல்லை.

கடந்த ஏப்ரல் மாதம் எனக்கு நன்கு தெரிந்த M.A பட்டம் பெற்ற பரதநாட்டியத்தில் தங்கப்பதக்கம் வாங்கிய ஒரு கணவன் மனைவி லண்டனுக்கு வந்திருந்தார்கள். அந்த மாணவியை வெம்பிளி தமிழ் பாடசாலையைச் சேர்ந்த மனுவேற்பிள்ளை அவர்கள் தங்களுடைய பாடசாலையின் நேர்முக தேர்விற்கு அழைத்துச் சென்றார். கொடுமை என்னவென்றால் கலாஷேத்ராவில் Diplamo பட்டம் பெற்ற ஒரு ஆசிரியர் M.A படித்த ஒருவரை தகுதியில்லை என்று நிராகரித்தார். இது தவறு இல்லை. ஆனால் இப்படி நடப்பது உண்டு. இதில் என்னை பாதித்த விஷயம் என்னவென்றால் நிராகரிப்புக்குரிய காரணம் அந்த மாணவியின் நடனம் கலாஷேத்ரா பாணியில் இல்லையாம்.

கலாஷேத்ரா என்றால் என்ன? ருக்மணி அருண்டேல் அவர்கள் ஆளுமையில் மிக உயர்ந்தவர்களைத் தனது மாணவிகளாக சேர்த்து படிப்பிக்கும் ஒரு டியூஷன் சென்டர். இந்தக் கல்லூரியில் படிப்பது என்பது எந்தச் சாதாரண மக்களுக்கும் முடியாத ஒன்று. இலங்கையர்களைப் போன்றவர்கள், மலேஷியாவில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். (குறிப்பாக இலங்கையில் இருந்து அமெரிக்கா, லண்டன் சென்று குடியேறு பவர்களுக்கு இன்னும் முன்னுரிமை) ஆனால் இது விஷயத்தில் கவனிக்க வேண்டிய

ஒன்று, பரதநாட்டியத்தில் மிகவும் ஆர்வமுள்ளவர்களை, தரம் உள்ள வர்களை எடுப்பதுதான் இவர்கள் வழக்கம். கலைக்காவேரி கல்லூரி அப்படியில்லை. இது ஒரு கிருஸ்துவ நிறுவனம். எந்த நிலையில் உள்ள மாணவர்களையும் சேர்த்துக் கொள்வது இவர்கள் கொள்கை. இந்த இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டைப் பற்றி ஒரு சிறு விளக்கம் தருகிறேன்.



அருட்தந்தை ஜார்ஜ் அவர்களுடன் பதிப்பாசிரியரும் மனைவி பத்மினியும்

பரத நாட்டியத்தில் அரைமண்டி போடுகின்ற ஒரு பயிற்சியைக் கலாஷேத்ரா இரண்டு வருடங்களுக்கு கொடுப்பார்கள். ஆனால் கலைக்காவேரியில் ஆறே மாதத்தில் முடித்து விடுவார்கள். லண்டனில் பல ஆசிரியர்கள் பல இடங்களில் வகுப்புகள் நடத்துகிறார்கள். ஆனால் எங்கள் மக்களில் சிலரோ பாரதிய வித்யா பவனுக்குத்தான் தங்கள் குழந்தைகளை அனுப்பி வைப்பார்கள். இது ஒருவிதமான அணுகுமுறை. நாங்கள் மீண்டும் விடயத்துக்கு வருவோம். நிராகரிக்கப்பட்ட இந்த மாணவி கலாஷேத்ரா பாணிதானா என்று அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் நானும் எனது மனைவியும் கலைக்காவேரி கல்லூரிக்கு சென்றோம். அங்கு 25 வருட காலமாக சேவையாற்றும் அருட்தந்தை ஜார்ஜ் அவர்களிடம் இதுபற்றி விசாரித்தோம். அவரின் பதில் கலாஷேத்ராவும் நாங்களும் ஒரேபாணிதான் என்று சொல்வதிலும் பார்க்க இன்னும் கொஞ்சம் சிறப்பாக சொல்ல வேண்டும் என்றால் கலாஷேத்ராவில் பயிற்றுவிக்கப்பட்ட யோகேஸ்வரி சண்முகநாதனும், ருக்மணி அருண்டேலிடம் படித்த கீதா கோபிநாத்தும் தான் எமது மாணவர்களை உருவாக்கியர்கள். இது விடயமாக சண்முகநாதன் யோகேஸ்வரியை சந்தித்துப் பேசினோம். இப்போதும் எங்களுடைய பரதநாட்டிய தேர்வுக்குத் கலாஷேத்ராவில் இருந்துதான் ஆசிரியர்கள் வந்து போகிறார்கள். இதிலிருந்து எனது சிற்றறிவுக்கு புரிந்தது என்னவென்றால் பரத நாட்டிய ஆசிரியர்கள் எல்லோரும் தவறு செய்கிறார்களா. இந்த விடயத்தில் எனக்கு சிறிய ஒரு அனுபவம் உண்டு. எனது மகளுக்கு பரதநாட்டியம் பயிற்றுவிக்கும் போது நான்கு ஆசிரியர்களிடம் போகவேண்டிய சூழ்நிலை இருந்தது. இந்த நாலு பேரும் வித்தியாசமான பாணியைத்தான் சொல்லிக் கொடுத்ததாக எனது மகள் கூறுவாள். இந்த நிலையில் ஒரு தரமான பரத நாட்டிய ஆசிரியரை லண்டன் இழந்துள்ளது. நேர்முகத் தேர்வு வைக்கும் போது சுதந்திரமான ஒரு குழுவிடம் ஒப்படைக்க வேண்டும். அப்பொழுதுதான் சரியான தகுதி கிடைக்கும். அரசாங்க நன்கொடை வாங்கிப் பாடசாலை நடத்துபவர்கள் இது விடயத்தில் போதிய கவனம் எடுப்பார்களா ?

திருமதி யோகேஸ்வரி சண்முகநாதன் மற்றும் மாணவிகளுடன் பதிப்பாசிரியரும் மனைவியும்



திருமதி யோகேஸ்வரி சண்முகநாதன் அவர்களுடன் பதிப்பாசிரியரும் மனைவியும்



லண்டனில் பரதக் கலை படிக்கும் மாணவி யருக்கு இந்தக் கட்டுரை சமர்ப்பணம். இதைப்பற்றிய உங்களின் கருத்துகளை வரவேற்கிறோம்.


பதிப்பாசிரியர்
சிவானந்த சோதி


நீங்கள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் உங்கள் குழந்தைகளை பரதக் கலை பயிற்றுவிக்க இந்த முகவரியை தொடர்பு கொள்ளலாம்.

Kalai Kaviri College of Fire Arts
18, Benwells Road
Thiruchirapalli - 620 001
INDIA

Tel : 0091 - 431 - 2401010
Fax : 0091 - 431 - 2461515
Email : kalaikaviri_offcamp@yahoo.co.in
Website : www.kalaikaviri-offcamp.com


இப்போது இலண்டனிலும்
ORIENT TEXTILE
&
Jewellery
Konigswall 16 (Am HBF)
44137 Dortmund
Tel : 0231-162377
Fax : 0231-147836
165 Upper Tooting Road
Tooting London SW 17 7TJ
Tel : 208 6823958


Jk Gold House &
Fashion House
314-316 London Road
Croydon Surrey CR0 2TJ
Tel : 020 8684 4577
Fax : 022 8684 4677
மாபெரும்
கழிவு
விற்பனை




உங்கள் உறவுகளுக்கு உலகின் எப்பாகத்துக்கும்
பணமாற்றீடு செய்ய சிறந்த நிறுவனம்

# ABBY EXCHANGE LIMITED

AEL Money Services — The Value of your Money — That's Abby Money

**928 Garratt lane, Tooting Broadway London SW17 0ND**

**Tel : 020 8672 0266 / 8672 7743 Fax : 020 8488 3114**

இரண்டாவது கிளை

**367, London Road, Croydon, CR0 3PB Tel : 0208 6897555**

விடுமுறையை

கழிக்க

சென்னைக்கு


போறீங்களா ?

வசதியாக
குடும்பத்தோடு தங்க
Non A/c Flatகள்
A/c Flatகள்
திருமணத்தை
நடாத்துவதற்கான
ஏற்பாடுகள்
வாகன வசதிகள்
அனைத்துக்கும்

**07801227110**

தொடர்புகட்கு

**M SRI**



# உன்னையே உருவாக்கு

அலைந்து அலைந்து
அலுத்து விட்டேன் - என்று
அலைகள்
ஒரு நொடியேனும்
ஓய்வெடுத்தது உண்டா ?

சுற்றி சுற்றி
சோர்ந்து விட்டேன் - என்று
பூமி
ஒரு நொடியேனும்
ஒதுங்கி நின்றதுண்டா ?

உழைத்து உழைத்து
களைத்து விட்டேன் - என்று
சூரியன்
ஒரு நொடியேனும்
ஓய்வெடுத்ததுண்டா ?

இளமை நெருப்பை
இதயத்தில் சுமந்து கொண்டு
சோம்பல் இருளில் மூழ்குவதா?

வாய்ப்பு வானம்
விரிந்த பின்னும்
சிறகினை முடக்கி
உறங்குவதா ?

வெற்றிக் கனிகள்
விருந்தாய் தெரிந்தும்
தோள்களை
உயர்த்தத் தயங்குவதா ?

வியர்வை கடலில்
வெற்றி முத்தெடுக்க
முயற்சியை முதலீடு செய்து விடு !

உலகம் வழி காட்டட்டும்
என காத்திருந்தது போதும்
செயலில் இறங்கி விடு !
உலகிற்கு வழி காட்டிட
உன்னையே உருவாக்கி விடு !

சிந்தனைக் கவிஞர்
கவிதாசன்



### மாதமிரு திருக்குறள் கற்போம்

## ஈகை

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின். ( குறள் : 225 )

தவ வலிமை உடையவரின் வலிமையானது பசியைப் பொருத்துக் கொள்ளுதல். அப் பொறுத்தற்கரிய பசியைத் தீர்ப்பவரது வலிமைக்குப் பிற்பட்டதே அவ்வலிமை.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி ( குறள் : 226 )

வறியவரின் கடும்பசியைப் போக்க வேண்டும். அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப் பொருளைப் பின்பு தனக்கு உதவ வேண்டிச் சேர்த்து வைக்கும் இடமாகும்.

கரம்பன் தெற்கு

**ச. நிக்கிலஸ் அவர்கள்**



நினைவில் வாழும் நிக்கிலஸ் அவர்களின் இரண்டாவது நினைவு தினம் 4.01.2007 அன்று நடைப்பெற்றது.

மனைவி, மக்கள், பேரக்குழந்தைகள்

புங்குடு தீவு - கரம்பன் தெற்கு

**அமரர் முத்தையா ஆறுமுகம் அவர்கள்**



தோற்றம் 06.12.1919 மறைவு : 09.01.2007

வீட்டுக்கிருத்தியம் 08.02.2007 அன்று சென்னை, அண்ணா நகர் இல்லத்தில் நடைபெற்றது.


மாதம்
ஒரு ஆன்மிகச்சுற்றுலா

தமிழ்நாடு – 15 நாட்கள்



அறுபடைவீடு, திருவண்ணாமலை
சிதம்பரம், மதுரை மீனாட்சி
கன்னியாகுமரி, திருப்பதி

குளு குளு வசதியுள்ள தங்குமிடங்கள்

சகல செலவு உட்பட
980 பவுண் மட்டும்

தொடர்புகளுக்கு
London
Euro Travels & Tours Ltd
Chennai
ARS Tours

111-B Loampit Vale
Lewisham London SE13
Tel : 0208 465 9666
Fax : 0208 465 9888

உலகின் எந்த பகுதிக்கும்
எங்களிடம் மலிவு விலையில்
விமான டிக்கெட்டுகள் பெற்றுக்கொள்ளலாம்

தமிழில் தொடர்பு கொள்ள
தி. அருள்தாஸ்

# ஜெனா சிற்பக் கலைக்கூடம்

# JENA HANDICRAFT

WOODEN HANDICRAFTS - MANUFACTURERS AND EXPORTERS
APPROVED BY SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD

S. Jeyakanthan
Proprietor

Tel : 011 - 2522956
Fax : 011 - 2527820
Factory : 284-285 Modera Street
Colombo - 15 Sri Lanka
Residence : 265 Modera Street
Colombo - 15 Sri Lanka

**ஜனா சிற்பக் கலைக்கூடம்**

இலண்டன் மாநகரில் உள்ள அநேகமான இந்து ஆலயங்களுக்கு சித்திரத் தேர்களை அமைத்துப் புகழ் பெற்ற நிறுவனம். இலங்கை யிலிருந்து சர்வதேச ரீதியில் விதம் விதமான அலங்காரங்களில் முத்து மணவறைகளை ஏற்றுமதி செய்து புகழ்பெற்ற நிறுவனம்

இலங்கையில் புகழ்பெற்ற இந்து ஆலயங்களுக்கு முப்பதுக்கும் மேற்பட்ட சித்திரத் தேர்களை அமைத்துப் புகழ் பெற்ற நிறுவனம்

வரலாற்றுப் புகழ்பெற்ற செல்வச் சன்னிதி முருகனுக்கும், காரை நகர் ஈழத்துச் சிதம்பரத்துக்கும் நிகரில்லாத சித்திரத் தேர்களை அமைத்து பெருமைகளை தனதாக்கிக் கொண்ட நிறுவனம்

தற்போது இலண்டன் மாநகரிலும் தனது கிளையை ஆரம்பித்துள்ளது.

**ஆலய நிர்மாணம்**

விதம் விதமான அலங்காரங்களில் (Design) விதம் விதமான அமைப்புகளில் முத்து மணவறைகள்.

கலையம்சத்துடன் கூடிய பூஜை மேடைகளின் கண்கவர் அணிவகுப்பு.

(Design Doors) வேலைப்பாடுகளுடன் கூடிய வீட்டுக் கதவுகள்.

புதிதாக Party Service ஆரம்பிக்க விரும்புபவர்களுக்கு விசேட விலைச் சலுகைகளும், இலவச ஆலோசனைகளும்.

தொடர்புகளுக்கு
S.ஜெயகாந்தன்
0203 - 2260011    078 - 7802 7534

கோயில்களுக்குரிய முத்து மணவறை - வாகனம் - மஞ்சம் - சித்திரத் தேர் முதலியவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் முன்னணி நிறுவனம்.


Email : sjeyakanthan@hotmail.com









# அது என்ன வசிய வித்தை

அது பாரதியார் வாழ்ந்த காலம். அப்போது டாக்டர் சஞ்சீவி என்று ஒருத்தர் இருந்தார். உலகப் புகழ் பெற்ற மனோவசிய மருத்துவர் அவர்.

இந்தியாவின் வசிய சாஸ்திரி என்று அமெரிக்கர்களாலேயே போற்றப்பட்டவர் அவர்.

அப்பேர்ப்பட்ட அவரை இன்னொருவர் வசியப்படுத்தி வைத்திருந்தார்.

அவர்தான் பாரதியார்.

இவ்வளவுக்கும் டாக்டர் சஞ்சீவி இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவர் அல்லர்.

ஆனாலும் பாரதியார் அவரைக் கவர்ந்தார்.

" பாரதியாரின் சாகித்தியமும் சங்கீதமும் அபார சக்தியோடு என்னைக் கவர்ந்துவிட்டன. இது என்ன ஹிப்னாட்டிசமோ? " என்று சொல்லி ஆச்சரியப்படுவார் அவர்.

அந்த மருத்துவரின் மாளிகைக்குப் பாரதியார் அவ்வப்போது செல்வதுண்டு.

ஒருநாள் அப்படிப் போனபோதுதான் அங்கே ஜயமுண்டு பயமில்லை மனமே என்ற பாடலைப் பாரதியார் பாடினாராம்.

அப்போது அங்கே பி.ஸ்ரீ. ஆச்சார்யாவும் இன்னும் சில பெரிய மனிதர்களும் இருந்திருக்கிறார்கள்.

பாரதியார் பாடிக்கொண்டிருக்கிறார்.

இவர்கள் மெய்மறந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பாட்டுக்கு அட்சர லட்சம் பெறுமானம் செய்யலாம் என்று இவர்களுக்குத் தோன்றியதாம்.

பாரதியார் பாடி முடித்திருக்கிறார்.

டாக்டர் சஞ்சீவி திடீரென்று எழுந்து உள்ளே போகிறார். கைப்பெட்டியைத் திறக்கிறார்.

ஒரு பத்து ரூபாய்த் தாளை அவசரமாகக் கையில் எடுத்துக் கொண்டு தொந்தி குலுங்கத் தடதடவென ஓடிவருகிறார்.

பாரதியாரிடம் அந்தப் பணத்தை நீட்டுகிறார்.

தயவு செய்து சிற்றுண்டி சாலைக்குச் சென்று காபி சாப்பிட்டு வாருங்கள்.

பாரதியாரின் முகம் பார்த்துக் குறிப்பறிந்து செய்த காரியம் அது.

அவர் கை பணத்தோடு காத்திருக்கிறது.

பாரதி அதை பார்த்தபடி இருக்கிறார். பெற்றுக் கொள்ளவில்லை.

டாக்டர் திகைத்துப் போகிறார்.

எதிரே இருந்தவர்கள் தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொள்கிறார்கள்.

' டாக்டர் சஞ்சீவிக்குத்தான் ஆயிரக்கணக்கில் வருகிறதே இவ்வளவுதானா கொடுக்கலாம். '

இப்படி எண்ணியபடியே அவர்களும் இந்தக் காட்சியை வியப்போடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

பாரதியாரின் தயக்கத்துக்கு என்ன காரணமாக இருக்கும் ?

அதற்கான காரணம் அடுத்த சில வினாடி களிலேயே அவர்களுக்கு விளங்கியது.

பாரதியார் சொன்னார்.

" டாக்டர்.... அந்த நோட்டைத் தங்கள் உள்ளங்கையில் வைத்துக் கொள்ளுங்கள். "

கவிஞரின் இந்த வேண்டுகோள் ஒரு கட்டளை மாதிரி ஒலிக்கிறது.

டாக்டர் அப்படியே செய்கிறார்.

தன் இரு கைகளையும் அகல விரித்து அதன் மீது அந்தப் பத்து ரூபாய்த் தாளை வைத்துக் கொண்டு பாரதிக்கு முன் நிற்கிறார்.

**தென்கச்சி சுவாமிநாதன்**

இப்போது கவிஞர் சிரித்தபடியே அந்த ரூபாய்த் தாளை அவர் கையிலிருந்து எடுத்துக் கொள்கிறார்.

பிறகு வெகு கம்பீரமாக பேசுகிறான் அந்தக் கவிஞன்.

" தங்களை கை என் கைக்கு மேலே வந்துவிடக் கூடாது என்று தான் நீங்கள் கொடுக்கவந்ததை நான் பெற்றுக் கொள்ளவில்லை. ஒரு கை தனக்குக் கீழே இரண்டு தரித்திரக் கைகளைத் தாழ வைத்துக் கொடுக்கிறதோ அந்தக் கொடை எனக்குத் தேவையில்லை. இலட்சம் பொன் கோடி பொன் கொடுத்தாலும் அந்தக் கொடை எனக்கு வேண்டவே வேண்டாம். அன்போடு கவிஞருக்கு கொடுப்பது கவிதா தெய்வத்துக்குக் கொடுக்கும் காணிக்கை. "

இந்த நிகழ்ச்சியை அருகிலிந்து கவனித்த பி. ஸ்ரீ. சொல்லுகிறார்.

" அப்போது அவர் முகத்திலே பெருந்தன்மை... ஏன்.... ஒரு அரச குல மாட்சியே தாண்டவமாடியது. "

பாரதியார் பணத்தை எடுத்துக் கொண்டு சிற்றுண்டி சாலைக்குப் போய்விட்டார்.

அங்கே இருந்த நண்பர்கள் பாரதியின் பாட்டைப் பற்றியும் அவருடைய செயல்பாடுகள் குறித்தும் வியந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

கொஞ்ச நேரத்தில் பாரதி சிற்றுண்டிச் சாலையில் இருந்து திரும்பி வருகிறார்.

இவர்கள் பேச்சை நிறுத்திக் கொள்கிறார்கள்.

டாக்டர் சஞ்சீவி கவிஞரைப் பார்த்து மெல்ல வேண்டுகிறார்.

" அந்தப் பாட்டை மறுபடியும் கேட்க ஆசைப்படுகிறோம். பாடுவீர்களா ? "

பாரதி உடனே பாட ஆரம்பித்தார்.

பாடிக் கொண்டே வந்தார்.

அது ஒரு ராணுவ கீதம் போல் ஒலிக்கிறது.

சஞ்சீவி சொல்கிறார்.

" இதைப் பாடிக் கொண்டே எங்காவது போருக்குப் புறப்படலாம் என்று தோன்றுகிறது. "

பாரதி சொல்கிறார்.

" ஆம்... சோர்வுடன் போர்... பயத்துடன் போர்... அவநம்பிக்கையுடன் போர்... மூட நம்பிக்கையுடன் போர்... வறுமையுடன் போர்... செல்வச் செருக்குடன் போர்... இப்படி எத்தனையோ போர்களுக்குப் பட்டாளம் திரட்டி நடத்திக் கொண்டு போக வேண்டியிருக்கிறதே... அதுதான் என் தொழில். "

அது நாள் வரை கவிதை என்றால் என்ன? அதன் பயன் என்ன என்று நண்பர்களிடம் கேட்டுக் கொண்டிருந்த டாக்டர் சஞ்சீவி இப்போது பாரதியாரிடம் சொல்கிறார்.

" தங்களது கவிதை என்னை வசீகரித்து விட்டதே ! "

இதற்குப் பதில்

" எனக்குத் தெரிந்து வசிய வித்தையெல்லாம் உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும் என்பதுதான். "

இப்படி அவர்கள் பேசிக் கொண்டிருக்கிற சமயத்திலே யாரோ ஒருவர் அங்கே வருகிறார். அவர் அங்கேயிருக்கிற பி.ஸ்ரீ. அவர்களிடம் வந்து சொல்லுகிறார்.

" கொஞ்ச நேரத்துக்கு முன்னால் பத்து ரூபாய் செலவு செய்து எங்களுக்கெல்லாம் சிற்றுண்டி வாங்கிக் கொடுத்தார் ஒருவர்... யாரோ தெரிய வில்லை. புதுச்சேரியிலிருந்து வந்தவராமே? " என்று சொல்லிக் கொண்டே திரும்பியவர்... " ஆகா இவர்தான் " என்று பாரதியாரைச் சுட்டிக் காட்டுகிறார். அங்கே இருந்த வேதநாயகம் பிள்ளை பாரதியாரின் பொத்தான் இல்லாத கோட்டையும் கிழிந்த சட்டையையும் பார்த்துவிட்டுக் கண்ணீர் ததும்ப டாக்டர் சஞ்சீவியைப் பார்த்துச் சொல்கிறார்.

" இதுதான் பாரதியாரின் வசிய வித்தை... இளைஞர்களே...! அந்தப் பாட்டுக் குயிலின் வசிய வித்தையைப் புரிந்து கொள்ளுங்கள். அதுதான் பாரதி நமக்குச் சொல்லிக் கொடுக்கிற பாடம்! உங்கள் உள்ளத்திலும் உண்மை ஒளி உண்டாகட்டும். அதன் விளைவாக வாழ்க்கை வசந்தமாகும். "

பாரதியார் ஒருமுறை தன் நண்பர்களுடன் ஒரு கிராமத்தில் நடந்த தெருக்கூத்தைப் பார்க்க போயிருந்தாராம். அந்தத் தெருக்கூத்திலே ஒருவன் பாடிக்கொண்டிருந்தான்.

" வெத்திலை வச்சான்...
பாக்கு வச்சான்...
புகையிலை வச்சான்...
ஒண்ணுவைக்க
மறந்துட்டான்...
சுண்ணாம்பு இல்லே...! "

இதைக் கேட்ட பாரதியார் உடனே " நம் நாடு இந்த நிலையில் தான் இருக்கிறது " என்று சொல்லிவிட்டு இப்படிப் பாடினாராம்.

" நீரு வச்சான் நிலமும் வச்சான்
நிகரில்லாத பலமும் வச்சான்
ஒண்ணுவைக்க மறந்துட்டான்
புத்தி இல்லே... புத்தி இல்லே...! " ●

# இழிவு படுத்தும் ஓவியங்கள்

## சுப. வீரபாண்டியன்

கடந்த திசம்பரில், இலங்கைத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், இந்தியத் தலைமை அமைச்சர் மன்மோகன் சிங்கைச் சந்திக்க தில்லி சென்றிருந்தேன். அந்தப் பயணத்தில், பல்வேறு பயன்தரத்தக்க, மகிழ்வான நிகழ்வுகளை எதிர்கொண்டபோதும், அதிர்ச்சியைத் தந்த அனுபவம் ஒன்றும் கிடைத்தது.

22.12.2006 காலை 11 மணிக்குத் தலைமை அமைச்சரைச் சந்திக்க எங்களுக்கு நேரம் ஒதுக்கப் பட்டிருந்தது. காலை 10.40 மணிக்கே, அவரின் அலுவலகம் உள்ள " சவுத் பிளாக் " என்று அழைக்கப் படும், தென் தொகுதிக்கு நாங்கள் சென்றுவிட்டோம்.

அப்பெரும் கட்டிடத்தின், ஒவ்வொரு அறையாக நாங்கள் தாண்டிச் சென்றதே ஒரு பெரும் அனுபவமாக இருந்தது. எங்கள் பெயர்கள், அடையாளங்கள் எல்லாம் சரி பார்க்கப்பட்டு, நாங்கள் கொண்டு சென்றிருந்த சால்வைகள் கூடச் சோதனை செய்யப்பட்டு, இறுதியாக மேல் தளத்தில் உள்ள ஒரு அறையில் நாங்கள் அமர்த்தி வைக்கப்பட்டோம். வட்ட வடிவமான அந்த அறையின் வெளிப்புறத்தில், ' பார்வையாளர் அறை ' என்று ஆங்கிலத்திலும், இந்தியிலும் எழுதப்பட்டிருந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்களும், நானும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த வேளையில், தற்செயலாக மேலே அண்ணாந்து பார்த்த எனக்கு, அந்த அதிர்ச்சி அங்கே காத்திருந்தது.

அந்த அறைச் சுவரின் மேற்பகுதியில் வரையப்பட்டிருந்த கூரை ஓவியத்தையும், அதில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த எழுத்துகளையும் நான் பார்த்தேன். " The Evolution of Hindu Aryan Life " என்று எழுதப்பட்டிருந்தது. இந்து ஆரிய வாழ்க்கையின் பரிணாம வளர்ச்சியே அங்கு படமாக வரையப்பட்டுள்ளது என்னும் குறிப்பு அது.

அதில் இரண்டு விதமான தொடர் ஓவியங்கள் இருந்தன. ஒவ்வொரு தொடரிலும் நான்கு ஓவியங்கள் காணப்பட்டன.

முதல் தொடரில், பிராமணர், சத்ரியர், வைசியர், சூத்திரர் என நான்கு கட்டங்களில் நான்கு பெரிய படங்கள் வரையப்பட்டிருந்தன.

" பிராமணர்கள் " என்று எழுதப்பட்டிருக்கும் படத்தில், பூணூல் அணிந்துகொண்டு, வேள்வி வளர்த்தபடி ஒரு சிலரும், சமஸ்கிருதத்தில் எழுதப்பெற்ற ஓலைச்சுவடிகளைப் படித்தபடி ஒரு சிலருமாய் உள்ளனர்.

' சத்ரியர் 'கள் மன்னர்களுக்கு உரிய ஆடை, அலங்காரங்களுடன் இருக்க, கையில் வாளோடு சிலர் நிற்கின்றனர்.

' வைசியர் 'கள் சில நகைகளைக் காட்டி மக்களிடம் வணிகம் செய்து கொண்டுள்ளனர்.

' சூத்திரர் ' என்று எழுதப்பட்டிருக்கும் படத்தில், ஆண்கள், பெண்கள் இருவருக்குமே மேலாடை இல்லை. ஒரு ஆண் ஏர் உழுகின்றார். சில ஆண்களும், பெண்களும் கூலி வேலை செய்கின்றனர்.

இதைத் தவிர, இன்னொரு வகையான தொடர் ஓவியங்களும் உள்ளன. அவை பார்ப்பன வாழ்க்கை முறையைக் காட்டுகின்றன. அவ்வோவியங்களின் கீழ், பிரம்மச்சரியம், கிரஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்று எழுதப்பட்டுள்ளது. அந்தந்த நிலைகளுக்கேற்ற ஓவியங்களும் வரையப்பட்டுள்ளன.

எனக்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. உடன் வந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதிர்ச்சி அடைந்தனர்.

" எந்த இடத்தில் இப்படி வரைந்திருக்கிறார்கள், பார்த்தீர்களா ? " என்றார் செல்வம் அடைக்கலநாதன்.

ஆம், ' அந்த இடத்திற்கு ' ஒரு தனி மதிப்பு இருக்கிறது. இந்தியாவின் தலைமை அமைச்சரைச் சந்திக்க வரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அனைவரும் அங்குதான் அமர்த்தி வைக்கப் படுவார்களாம். ஆக, வெளிநாட்டினர் அனைவரும், அதுதான் இந்தியாவின் 'உன்னதமான ' வாழ்க்கை முறை என்று கருதிக் கொள்வார்கள். அதற்காகத் தான் அந்த ஏற்பாடு என்று புரிந்தது.

எல்லா ஓவியத்தின் கீழும் தாமரைப் பூவின் படமும் வரையப்பட்டிருந்தது. ஆனால் அந்த ஓவியங்கள் வரையப்பட்ட ஆண்டு 1929 என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

வெள்ளைக்காரன் ஆண்ட காலத்திலேயே இவர்கள் தங்கள் வேலையைத் தொடங்கிவிட்டனர்

என்பது புரிகிறது. *1928, 29* கால கட்டத்தில்தான், சைமன் குழுவை எதிர்த்துக் கொண்டிருந்தனர். அவ்வெதிர்ப்புப் போராட்டத்தில், காங்கிரசுக்குள் இருந்த, பழுத்த பார்ப்பனர்களான மதன்மோகன் மாளவியா போன்றவர்கள் முன்வரிசையில் நின்று கொண்டிருந்தனர்.

சைமன் குழு எதிர்ப்புப் போராட்டம் ஒரு புறம், வெள்ளைக்காரனை அண்டிப் பிழைத்து, தங்கள் வருண, சாதிப் போலி மேன்மையை, முக்கியமான இடத்தில் ஓவியமாக வரைந்து கொள்வது மறுபுறம் என்று இரட்டை நிலையை அவர்கள் கடைப்பிடித்துள்ளனர்.

தந்தைப் பெரியார் சொல்வார், '' ராஜாஜி, தாழ்த்தப்பட்டவர் வீட்டில் அமர்ந்து சாப்பிடுவார். சங்கராச்சாரி, தாழ்த்தப்பட்டவரைக் கண்டால், கண்ட தீட்டு நீங்க, வீட்டிற்கு வந்து குளிப்பார். ஆனால் இருவரும் பார்ப்பனர்களாகவே இருப்பார்கள் '' என்று. அதே நிலைதான் இன்னும் நீடிக்கிறது.

'' இந்த இடம் வரையில் வந்து நம்மை இழிவு படுத்துகிறார்களே '' என் று வருத்தம் தெரிவித்தார் இன்னொரு நாடாளுமன்ற உறுப்பினர். '' இல்லையில்லை, நாம்தான் இன்று புதிதாக உள்ளே வந்துள்ளோம். அவர்கள் இங்கேயேதான் இருக்கின்றார்கள் '' என்று நான் சொன்னேன்.

எனினும் அந்தத் தாமரைப் பூவின் படம், பிற்காலத்தில் வரையப்பட்டிருக்குமோ என்றும் தோன்றியது. ஓவியங்களின் மற்ற பகுதியோடு ஒப்பிடும் வேளையில், அது கொஞ்சம் பளபளப் பாக இருந்ததே என் ஐயத்திற்குக் காரணம்.

எவ்வாறாயினும் ' சூத்திர இழிவு ' பிரதமர் அலுவலகம் வரை நம்மோடு ஒட்டிக் கொண்டிருக்கிறது என்பதையே இது காட்டுகிறது. இந்து ஆரிய வாழ்க்கை முறையில் 'பஞ்சமர்' களுக்கு அந்த இடம் கூட வழங்கப்பட வில்லை. ஒரு விதத்தில் பஞ்சமர்கள், ' அவருணத்தார் ' என்பது பெருமையே. கேடுகெட்ட வருண தரும அடிப்படையில் வாழ்வதை விட, அதை விட்டு விலகி நிற்பது அல்லது விலக்கி வைக்கப்படுவது, பெருமை தரும் நிகழ்ச்சிதானே!

நேரு ' பண்டிதரும் ', இராஜேந்திர பிரசாத் என்னும் காயஸ்தரும் அந்த ஓவியங்களை ரசித்திருக்கலாம். ஆனால் அப்துல் கலாம், மன்மோகன் சிங் என்னும் இரண்டு ' சூத்திரர்கள் ' இந்தியாவின் மிக உயர்ந்த பொறுப்புகளில் உள்ள இந்தக் கால கட்டத்திலாவது அந்த ஓவியங்கள் அழிக்கப்பட வேண்டாமா? ●


**நம்பிக்கை மூலை**

ஜெர்மானிய அறிஞர் ஒருவர் இருந்தார். உலகில் உள்ள எல்லா நூல்களையும் கற்கிற ஆசை அவருக்கு வந்தது. வெறித்தனமாகப் புத்தகங்களை சேகரிக்கத் தொடங்கினார். உலக நாடுகளின் தத்துவங்கள், தொழில் நுட்பங்கள், விஞ்ஞானம் என்று அனைத்தையும் சேகரித்தார். அவற்றில் ஒன்றைக்கூட அவர் படிக்கவில்லை. வயது எண்பதைக் கடந்தது. மரண பயம் வந்தது. உடனே அந்த நூல்களை மொழிப் பெயர்க்க ஏற்பாடு செய்தார். அதற்கும் காலம் போதாது என்று தோன்றியதால் அவற்றைப் படித்து யாராவது சொல்வார்களா என்று தேடினார். அதற்குள் மரணம் நேர்ந்தது. எதையும் சேகரிப்பது முக்கியம்தான். செயல் படுத்துவது அதைவிட முக்கியம்.

நம்மை நோக்கி யாராவது ஒரு விரலை நீட்டினால் அந்த விரலை எப்படி உடைப்பது என்று எண்ணுவதற்கு மேலாக, அதே மனிதரை எப்படி மேலும் நான்கு விரல்களை நீட்டி நம்மை நோக்கி கைகுலுக்க வரவழைப்பது என்று சிந்திக்க வேண்டும்.

தி.க. சந்திரசேகரன்

**மொழி ஞாயிறு தேவநேயப்பாவாணர் வெளியிட்டுள்ள தமிழ் நாட்காட்டி**




மொழிப்போர் ஈகிகளுக்கு வீரவணக்கம்

# நல்லூர் சட்டநாத ஈஸ்வரர் கோவிலின் தோற்றம்

## அறிமுகம்

தலவரலாறு பற்றிய ஆய்வுகளானவை ஒரு நாட்டினுடைய அல்லது ஒரு பிரதேசத்தினுடைய கலாசார மரபுகளை வெளிக்கொணருவதாக அமையும். ஏனெனில் தென்னாசிய வாழ்வு முறையானது வரலாற்றுக் காலம் தொட்டு இன்று வரை தலங்களையே மையமாகக் கொண்டு உருவாக்கம் பெற்றும், வளர்ச்சியடைந்து கொண்டமையுமே அதன் அடிப்படைக் காரணியாக அமைந்தது. இப்பிரதேசத்திலே மதமும், மனித வாழ்வும் ஒன்றிலிருந்து ஒன்றினைப் பிரித்துப் பார்க்க முடியாதளவுக்கு முறையே மணமும் மலரும் போன்று இணைந்து விளங்குவதனை அப்பிரதேச மக்களது கலையையும் வாழ்வினையும் பற்றி ஆராயப்புகும் ஒருவர் நன்கு தெரிந்து கொள்வார். அவ்வகையில் கோவில்கள் அல்லது தலங்கள் தென்னாசிய மனித வாழ்வின் உயிரோட்டமான மையங்களாக, அப்பிரதேச மக்களுடைய வாழ்வு முறைகளை உருவாக்கி வளர்த்த களங்களாக விளங்கின என்றால் அது மிகையாகாது.

தென்னாசியாவிலே மனித நாகரிக வாழ்வு முறையின் ஆரம்பம் எந்தளவுக்குப் பழமை வாய்ந்ததாக விளங்குகின்றதோ அதே கால எல்லை வரைக்கும் தலங்களில் தோற்றமும் மிகப்பழமை வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. தென்னாசியாவின் தென் அந்தத்திலே இந்து சமுத்திரத்திலே ஒரு மிதி கல்லாக விளங்குகின்ற இலங்கைத்தீவின் நாகரிகத்தினைப் பொறுத்தவரையிற்கூட வைதீக மரபினைச் சேர்ந்த தலங்களினது தோற்றமானது அத்தீவினது வரலாற்றின் முன்னுரையாக அமைந்துள்ளமையைக் காணமுடிகிறது. இதனை நன்கு அவதானித்த போல் இ.பீரிஸ் என்ற சிங்கள ஆய்வாளர் கூட விஜயனது வருகைக்கு முன்பிருந்தே இலங்கையில் ஐந்து ஈஸ்வரன் ஆலயங்கள் இருந்து வந்தன எனவும் இந்தச் சிவாலயங்கட்கு இந்தியாவிலிருந்தும் மக்கள் வந்து வழிபட்டுச் சென்றனர் எனவும் குறிப்பிட்டு விட்டு, அவ்வைந்து ஈஸ்வரங்களின் பெயர்ப்பட்டியலை பின்வருமாறு கொடுத்துள்ளார்.

(அ) மகாதீர்த்தத்திற்கு (மாதோட்டம்) அருகிலுள்ள திருக்கேதீஸ்வரம்

(ஆ) முன்னேஸ்வரம்

(இ) தொண்டேஸ்வரம்

(ஈ) திருக்கோணேஸ்வரம்

(உ) காங்கேசன் துறைக்கு அருகிலுள்ள நகுலேஸ்வரம் என்பவையே அவையாகும் (கிருஷ்ணராசா செ. 1980)

இவ்வகையிலே இலங்கைத் தீவினது நாகரிக வாழ்வுக் கட்டுமானப் பணியிலே இச்சிவ – ஈஸ்வரக் கலாசாரம் முன்னுரையாகவும், ஆதாரமாகவும் அமைந்திருந்த போது, இந்தியாவிலே பௌத்த மதத்தினது தோற்றத்துடன் அது உப கண்டத்திற்கு வெளியே தென்னாசிய, தென் கிழக்காசிய, தூர கிழக்காசிய நாடுகளுக்கும் பரவி (அம்மதமானது) வெளிநாட்டு ஆட்சியாளர்களையும் கவர்ந்து கொள்ளக்கூடிய ஒரு சமகாலச் சர்வதேச மதமாகவும் மாற்றம் பெற்றுக் கொண்டது. அதன் விளைவாக அவ்வப்பிரதேசங்களிலே மக்களுடைய வாழ்வு முறைகளில் கலந்து, அவர்களை நாகரிகப்படுத்தும் ஒரு நிறுவனமாகவும், தொழிற்பட்டுக் கொண்டிருந்த நேரத்திலே, இலங்கையிலே, இந்த ஈஸ்வரக் கலாச்சார மையங்கள் அவை மக்களுடன் கொண்டிருக்கக்கூடிய பிணைப்புக்களையெல்லாம் மெல்ல மெல்ல இழந்து, காலவோட்டத்திலே பௌத்த மதத்தினது செல்வாக்கின் பின்னணியிலே தமது சிறப்புக்களையெல்லாம் மறைத்த நிகழ்வினைக் காணக் கூடியதாகவுள்ளது. இவ்வாறு இடம்பெற்றவோர் நிகழ்விற்குச் சிறந்தவோர் உதாரணமாக அநுராதபுரத்திலுள்ள இசுறுமுனிய விகாரையை எடுத்துக்காட்டுவது மிகப்பொருத்தமாக அமையும். உண்மையிலே முனிஈஸ்வரம் (முன்னீஸ்வரம்?) என வழங்கப்பட்டு வந்திருக்கக் கூடிய இத்தலமானது பௌத்தத்தினது மேற்குறிப் பிட்டது போன்ற நிகழ்வினால் அதன் பெயரானது பின் முன்னாகத்திரிபடைந்து (ஈஸ்வரம் + முனி → ஈஸ்வரமுனி → ) இசுறுமுனி என இன்று ஒரு பௌத்தவிகாரைக்குரிய பெயராக வழங்கி

வருவதனைக் காணலாம். (Raghavan, M.D)இன்றும் இவ்விடத்திலே கஜலக்ஷ்மியினது சிற்பம், மாமல்ல புரத்தினையொத்த யானைகளது புடைப்புச் சிற்பங்கள், தீர்த்தக்கேணி, போன்ற வைதீக சமயக் குறியீடுகள் எஞ்சிக் காணப்படுவது குறிப்பிடத் தக்கதாகும் இவ்வாறு எத்தனை ஈஸ்வரங்கள் இன்று இசுருவாக உருச்சிதைந்துள்ளனவோ?

## பெயர்க்காரணம் பற்றிய ஆய்வு


யாழ்ப்பாணத்திலே, நல்லூரின் கண் அமைந்து காணப்படுகின்ற சட்டநாதர் என இன்று வணங்கப்பட்டுக் கொண்டு வருகின்ற கோவிலின் தோற்றம் பற்றிய நோக்கிலே, அதன் பெயர்க்காரணம் பற்றிய ஆய்வு முதற்படியாக அமைவதனைக் காணலாம். அவ்வகையில் இந்த ஈஸ்வரன் கோவிலின் திட்டவட்டமான பெயரினை அதாவது இன்று வழக்கிலிருந்து கொண்டிருக்கின்ற பெயர்தான் அக்கோவிலின் தோற்றகாலத்திலேயும் வழங்கப் பட்டதா அல்லது உண்மையான அப்பெயர் மருவிச் சென்று இன்று வழக்கிலிருக்கும் நிலையை அடைந்து கொண்டதா என்பதனையிட்டுச் சற்று சிந்திக்க வேண்டியுள்ளது. இது தொடர்பான அடிப்படையான ஆதாரங்களைத் தேடிப் பெற்றுக் கொள்வதில் இன்று மிகவும் கஷ்டமான ஒரு நிலை காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இருப்பினும்,யாழ்ப்பாண இராச்சியத்து ஆரியச் சக்கரவர்த்திகளின் வரலாற்றைக் கூறும் இலக்கிய நூலான யாழ்ப்பாண வைபவ மாலையில் ஓரிடத்திலே முதன் முதலாக இக்கோவிலைப் பற்றிய குறிப்பொன்று இடம்பெறுவதனைக் காணமுடிகிறது.

''...............நாலு மதிலும் எழுப்பி வாசலும் ஒழுங்காய் விடுத்து மாட மாளிகைகளும் கோபுரங்களும் பூங்காவும், பூங்காவின் நடுவிலே ஸ்நான மண்டபமும், மூப்புடைக்கூபமும் உண்டாக்கி அக்கூபத்திலே யமுனா நதித் தீர்த்தமும் அழைப்பித்துக் கலந்து விட்டு நீதி மண்டபம் யானைப் பந்தி, குதிரைப் பந்தி, சேனாவீரரிருப்பிடம் முதலிய அனைத்தும் கட்டுவித்து கீழ்த்திசைப் பாதுகாப்பாக வெயிலுவந்த பிள்ளையார் கோவிலையும் மேற்றிசைக்கு வீரமாகாளியம்மன் கோவிலையும் வடதிசைக்குச் சட்டநாதேஸ்வரர் கோவில், தையல்நாயகியம்மன் கோவில் சாலை விநாயகர் கோவிலையும் கட்டுவித்து ........... வாழ்ந்திருந்தான் '' யாழ்ப்பாண வைபவ மாலையில் குறிப்பிட்ட இக்கோவிலின் பெயரினை உறுதிப் படுத்தும் பொருட்டு வேறு ஏதாவது சாசனச் சான்றுகள் அகப்படுமா என்று தேடியலைந்த பொழுது, எமக்கு முக்கியமானவொரு தாமிரசாசனம் கிடைத்தமையானது அக்கோவிலின் தோற்றம் பற்றிய ஆய்விலே புதியதொரு உத்வேகத்தினைக் கொடுத்து, இக்கோவிலினது மணிக்கோபுரத்திலே இன்று வரை பாவனையிலிருந்து வரும் ஆலயமணியிலே பொறிக்கப்பட்டுள்ள சாசனமானது யாழ்ப்பாண வைபவ மாலையிலே கொடுக்கப்பட்டிருந்த பெயரை நன்கு உறுதிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது. அச்சாசனத்தின் வாசகம் வருமாறு:

| மூலம் | வாசிப்பு |
|---|---|
| சாலிவாகன சகாப | சாலிவாகன சகாப் |
| உ | உ |
| தம கஎஅது | தம் 1784 |
| கலயதபதம நுகூசுங | கலியப்தம் 4963 |
| தநதுபி வருஷம் | தந்தபி வருஷம் |
| யாழ்ப்பாணத்தைச் சரர்ந்த | யாழ்ப்பாணத்தைச் சார்ந்த |
| நல்லூர் சட்டநாதன கொ | நல்லூர்சட்டநாதன் கோ |
| யிலுக்கு சிவசம்பு – ம | யிலுக்கு சிவசம்பு – ம |

யாழ்ப்பாண வைபவமாலையைப் பொறுத்த வரையிலே அதில் குறிப்பிடுகின்ற சட்டநாதேஸ்வரர் என்ற பெயரானது கி.பி. 18ஆம் நூற்றாண்டுக் காலத்திலும் அதற்கு முன்பும் வழக்கிலிருந்து வந்திருக்கின்றது என்பதற்கு ஆதாரமாகின்றது. தொடர்ந்தும் அடுத்து வந்த நூற்றாண்டிலே சட்டநாதன் என்ற பெயர் வழக்கிலிருந்து வந்துள்ளது என்பதற்கு மேலே குறிப்பிட்ட அத்தாமிரசாசனம் ஆதாரமாக அமைகின்றது. அதே வழக்கு முறையே இன்றும் தொடர்ந்து வழங்கி வருவதனை நாம் காண்கின்றோம். இருந்த போதிலும் இக்கோவிலினது தோற்றம் தொடர்பாக பல ஐதீகங்கள் இருந்து



வ.உ.சி. சுதேசிக் கப்பல் வாங்கி பிரயாணத்துக்கு விட்டபோது அவர் பெருமளவுக்கு நஷ்ட மடைந்தார். தூத்துக்குடிக்கும், கொழும்புக்கும் இடையே நடந்த கப்பல் சேவைக்கு இவர் கட்டணம் ஐந்து ரூபாய் என்று அறிவித்தபோது ஆங்கிலேயர் இரண்டு ரூபாய் என்று அறிவித்தார்கள். இவர் 2 ரூபாய் அறிவித்தபோது அவர்கள் $1\frac{1}{2}$ ரூபாய் அறிவித்தார்கள். இப்படி அறிவித்ததினால் அவர் பெரிதும் நட்டமடைந்தார். இதற்குக் காரணம் நம்மவர்கள் அவரை ஆதரிக்காமல் விட்டது. இன்றும் இது நடைபெறுவதைக் காணலாம். நம்மவரை ஆதரிக்கப் பழகினால் நன்மை பெறலாம்.

வ.உ.சியின் வரலாற்றிலிருந்து

கொண்டிருக்கின்றன என்பதனை வெளிக்கள ஆய்வின் போது நன்கு அறிந்து கொள்ள முடிந்தது. அந்தவோர் அடிப்படையே சட்டநாதர் கோவிலினது தோற்றம் தொடர்பாக மேலும் தொடர்ந்து ஆராய்வதற்கு உந்துசக்தியாக அமைந்தது.

## சட்டைமுனியும் சட்டநாதரும்

இக்கோவிலினது தோற்றம் தொடர்பான ஐதீகங்களுள் சட்டைமுனி என்றழைக்கப்பட்ட ஒரு சித்தருடைய சமாதியே இக்கோயிலின் தோற்றத்திற்குக் கருவாக அமைந்தது என்பதும் நோக்கத்தக்கதாகும். பொதுவாகத் தென்னாசியக் கட்டிடக் கலை வரலாற்றிலே, பல்வேறுவகையான கோயில்களைக் குறிப்பாகத் தென்னாட்டில் காண முடிகிறது. அவற்றின் பெயர்கள் அக்கோயில்களின் அமைப்புக்கேற்றவாறு வழங்கப்படுவதனையும் காணலாம். ஆலக்கோயில், இளங்கோயில், ஈஸ்வரம், கரக்கோயில், கொகுடிக்கோயில், ஞாலற்கோயில், துங்கானை மடம், பெருங்கோயில், மணிக்கோயில், பள்ளிப்படை என்பன அவற்றுள் சிலபெயர் வடிவங்களாகும். ( ஸ்ரீனிவாசன் C. R. 1968) இவ்வகையான கோயில்களுள் சமாதிக்கோயில்கள் அல்லது பள்ளிப்படைக் கோயில்கள் பெருமளவுக்கு ஈஸ்வரன் கோயில்களாகவே அமைக்கப்பட்டு வந்தன என்பதற்கும் சான்றுகள் உள. இக்கோயில்களின் அமைப்பு வழக்கானது கி.பி.9ம் நூற்றாண்டுக்கு முன்னர் தமிழ்நாட்டிலேயோ அல்லது தென்னிந்தியா இலங்கையிலோ நடைமுறையில் இருந்தது என்பதற்குச் சான்றுகள் ஏதுமில்லை ( ஸ்ரீனிவாசன் C.R. 1968 )

பொலநறுவையிலே கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியிலே ஆழ்ந்து வெளிப்படுத்தப்பட்ட சிவாலயங்களுள் ஐந்தாவது சிவாலயம் ஒரு பள்ளிப்படைக்கோயிலாக அமைக்கப்பட்டிருந்தது என்பது அதனுட்புறத்திலிருந்து வெளிக்கொணரப் பட்ட ஈமத்தாழிகளினாலும் சின்னங்களினாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வகையிலே சட்டநாதர் கோயில் தொடர்பான இச் சட்டைமுனி பற்றிய ஐதீகமானது எந்தளவிற்கு அக்கோவிலின் தோற்றத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்கலாம் என்பது அடிப்படைப்பிரச்சனையாக அமைகின்றது. ஏனெனில் ஐதீகமளவிலே சட்டைமுனியின் சமாதியுடன் தொடர்புடைய அச்சட்டைநாத ஈஸ்வரர் கோயில் தொடர்ந்தும் அது ஸ்தாபிக்கப்பட்ட இடத்திலேயே இன்றுவரை இருந்து கொண்டிருக்கிறதா என்பதையிட்டு ஏற்படும் சந்தேகமும் அதற்குக் காரணமாகும்.

எவ்வாறாயினும் இலக்கியங்களிலே சட்டைமுனி என்று குறிப்பிடப்படுபவர், 10ம், 11ம், 12ம் நூற்றாண்டுகளிலே வாழ்ந்திருந்தனர் எனக்கொள்ளப் படும் சித்தர் பரம்பரையிலே ஒருவரான பாம்பாட்டிச் சித்தருடைய குருவாக இவர் குறிப்பிடப்படுகிறார். (கலைக்களஞ்சியம், பாகம் 10, பக்கம் 371) பாம்பாட்டிச்சித்தருடைய பலபாடல்கள் நாத ஈஸ்வரனைத் துதித்துப் பாடப்பட்டவையாகவுள்ளன என்பதும் குறிப்பிடத் தக்கது. இவ்வடிப்படையிலே பார்க்கும்போது இவ்கோயிலின் தோற்ற வரலாற்றினை சட்டைமுனியுடன் தொடர்புபடுத்திப் பார்க்கலாமா என்றும் எண்ணத் தோன்றும். அக்கருது கோளின் அடிப்படையிலே இத்தலத்தின் பெயர் சட்டைநாத ஈஸ்வரர் என்றோ அல்லது சட்டைநாதன் என்றோ வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் கொள்ளலாம். அவ்வாறான ஒருமரபு இருக்குமாயின் அது நிச்சயமாக 18ம் நூற்றாண்டின் முன்னரேயே வழக்கிலிருந்திருக்க வேண்டுமென்றும் கொள்ளலாம். இவ்வாறான ஒரு மரபு இருக்குமாயின் அது நிச்சயமாக 18ம் நூற்றாண்டின் முன்னரேயே வழக்கிலிருந்திருக்க வேண்டும் ஏனெனில்




### சிவன் அழைக்கிறார்

ஜெகதீஸ்வரம் லண்டன் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வவர் திருக்கோயில்

இந்த வாரம் தபால் உறையில் ஒரு விளம்பரமும் அத்துடன் விபூதி பிரசாதமும் தமிழர் தகவலுக்கு வந்தது. சிவன் கோவில் ஒன்று Mitchem Pond வீதியில் அமைந்திருப்பதாக அதில் எழுதப்பட்டிருந்தது. அரச மரமும் வேப்ப மரமும் சேர்ந்திருந்தாலே ஒரு பிள்ளையார் கோயில் அமைப்பார்கள். அப்படி வீதியெல்லாம் இருக்கும் பிள்ளையாருக்கு லண்டனில் பல கோயில்கள் உண்டு. இந்தப் பிள்ளையார் கோயில்கள் சைவத்துக்கு உரியது அல்ல. உண்மையான சைவத்துக்கு உரிய கோயில் சிவன் கோயில் மட்டுமே. இந்தக் கோயிலை அமைக்கும் மணிவண்ணன் என்பவர் பல இடங்களை நாடிக் கடைசியாக இந்த இடத்தைப் பிடித்துள்ளார். இந்த இடத்திலாவது சிவன் நிலைப்பாரா ? இது உண்மையான சைவ மக்களின் கையில்தான் உள்ளது.

பதிப்பாசிரியர்

முகவரி
Unit 14 Menin Works Bond Road
Mitchem London CR4 3HG
Tel : 020 8648 7493

யாழ்ப்பாண வைபவமாலையிலே அது சட்டநாதேஸ்வரர் என்ற அதன் மருவுப்பெயராகவே கொடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே சட்டைநாதவீஸ்வரம் என்ற பெயர் இத்தலத்திற்கு வழங்கப்பட்டிருக்குமாயின் அது தொடர்பான சான்றுகள் ஏதாவது அப்பெயரினை உறுதிப்படுத்துகின்றனவா என்று நோக்குவது மிக மிக அவசியமானது. சட்டநாதர் என்ற பெயர் வடிவிலே இந்து விக்ரஹவியல் கோட்பாடுகளில் எந்தவிதமான குறிப்புகளும் இடம்பெறாத ஒரு நிலையில் சட்டநாதர் என்ற வடிவமானது மதுரைத் தமிழ் பேரகராதியில் (பாகம் 1, பக் 02) சிவன், வயிரவன், இறைவன் என்ற பொருள் கொள்ளும் எனக் குறிக்கப்பட்டுள்ளது. அவ்வகையிலே சட்டைநாதர் என்பது சிவனுடைய பைரவ மூர்த்தங்களுள் ஒன்று. இரணியனைக் கொன்றதால் தருக்கித்திரிந்த நரசிங்கத்தை அடக்கி அதன் எலும்பை கதையாகவும் தோலைச் சட்டையாகவும் தரித்தவரே சட்டைநாதர் என புராணரீதியான ஒரு விளக்கம் கொடுக்கப் பட்டுள்ள போதிலும் (வளவர்கோன் 1974) அதனை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் எவ்விதமான சமய இலக்கிய ஆதாரங்களோ அல்லது விக்கிரஹவியல் சான்றுகளோ கிடைப்பது அரிதாகவுள்ளது. இவ்வாறான ஒருநிலையில் யாழ்ப்பாண வைபவ மாலையில் குறிப்பிடப்பட்ட அப்பாகத்திலோ, தையல்நாயகியம்மன் கோயில் பற்றிய குறிப்பானது அங்கே தவறுதலாக சட்டநாதேஸ்வரர் என்று மருவுப் பெயராக இடம்பெற்றுள்ள தன்மையினையும் பதிலாக சட்டைநாத ஈஸ்வரர் எனத் தையல்நாயகி என்ற பெயருக்கேற்ப இடம்பெற்றிருக்கலாம் எனவும் ஊகமாகக் குறிப்பிடலாம். இவ்வாறு இக்கோவிலினது பெயர்த் தோற்றம் தொடர்பாக எழுந்த பிரச்சனைகளின் அடியாக உதித்த ஒருகருது கோளானது சோழப் பேரரசர்களுடைய காலத்துடன் இக்கோவிலினது தோற்றத்தினை எடுத்துக் காட்டுவதற்கு வழிகோலியது.

## சோழரும் சிவாலயங்களும்

தென்னிந்தியாவைப் பொறுத்தமட்டிலே கி.பி. 9ம் நூற்றாண்டுடன் சோழப் பேரரசின் ஆதிக்கம் வளர்ச்சியடைந்தமையினை தென்னிந்திய வரலாறு கற்றோர் நன்கறிவர். அப்பேரரசின் விஸ்தரிப்புக்கும் திராவிடக்கலைகளின் வளர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்கிய இரு மாமன்னர்களான முதலாம் இராசராசன் முதலாம் இராசேந்திரன் ஆகியோர் பேரரச ஆழ்புலத்திலே பல சிவன் கோவில்களையும் அமைத்தனர். தஞ்சைப்பெருவுடையார் கோவில் இவற்றுக்கெல்லாம் ஒரு உரைகல்லாக திராவிட சிற்பக்கலைகளின் உச்சமான ஓர் உறைவிடமாக விளங்குவதனைக் காணலாம். அவ்வகையிலே இலங்கையும் சோழப்பெரும் பேரரசின் மாகாணங்களுள் மும்முடிச்சோழ மண்டலமாக கி.பி. 993க்கும் 1070க்குமிடைப்பட்ட காலத்திலே ஆளப் பட்டதன் விளைவாக இங்கும் பல சிவன்கோவில்கள் அம்மன்னர்களால் கட்டுவிக்கப்பட்டன. அவ்வாறான சிவன் கோவில்கள் முக்கியமான நிர்வாக மையங்களாக விளங்கியிருந்திருக்கக்கூடிய நகரங்களிலே நிறுவப்பெற்று அம்மன்னர்களுடைய பெயர்களினாலோ அல்லது விருதுப்பெயர் களினாலோ பெயரிடப்பெற்று பலதானங்களும் வழங்கப்பட்டமைக்கு இதுவரையில் இங்கு கண்டெடுக்கப்பட்ட சோழர்காலத் தமிழ்க்கல் வெட்டுக்கள் சான்றுகளாகின்றன. அவ்வகையில் முதலாம் இராசராசனது விருதுப் பெயர்களிலேயே அழைக்கப்பட்ட பல சிவன் கோயில்களை தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் அறியமுடிவது இங்கு குறிப்பிடத்தக்கது. இரவிகுலமாணிக்க ஈஸ்வரம், இராசராச ஈஸ்வரம், வானவன் மாதேவி ஈஸ்வரம் என்பன இலங்கையிலே சோழர் காலத்தில் அமைக்கப்பட்ட முக்கியமான கோயில்களாகும். இதில் வானவன் மாதேவி ஈஸ்வரம் என்ற பெயருடைய 2வது சிவாலயம் முதலாம் இராசராசனுடைய தாயாரினது பெயரில் பொலநறுவையிலே முழுமையான கருங்கற் களினால் கட்டப்பெற்ற கோயிலாக இன்றுவரை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

தென்னிந்தியாவிலே முதலாம் இராசராசனுடைய விருதுப்பெயர்களிலேஅமைந்த சிவாலயங்களாக அருமொழி ஈஸ்வரம், இராசராசஈஸ்வரம், சோழேந்திர ஈஸ்வரம், ஜெயங்கொண்ட சோழ ஈஸ்வரம் என்பவை காணப்படுகின்றன. இவ்வகையிலே இலங்கையில் இச்சட்டைநாத ஈஸ்வரர் கோயிலின் தோற்றம் தொடர்பாக முதலாம் இராசராசனின் விருதுகளில் ஒன்றான ஜனநாதன் என்பதனையும் இணைத்துப் பார்க்கக் கூடிய தொன்றாக இருப்பது இங்கே நோக்கற்பாலதாகும்.

ஜனநாதஈஸ்வரம் என்ற நாமமே ஜடாநாதஈஸ்வரம் என்றாகிப் பின் ஜடை நாதவீஸ்வரம் எனத்திரிந்து நட்டநாதஈஸ்வரம் என இன்று வழங்கி வருகின்றது எனக்காணலாம். இக்கருதுகோளினை உறுதிப்படுத்துவதாயின் சாசன, இலக்கிய மூலாதாரங்களை எதிர்காலத்தில் தேடிப்பெற வேண்டிய ஓர் அவசியம் ஏற்படும். முதலாம் இராசராசனது விருதுப்பெயர் என்ற வகையில், ஜனநாதபுரம் என்ற பெயர் அவர்களுடைய மும்முடிச் சோழ மண்டலத்தின் தலைநகரான

பொலநறுவைக்குச் சூட்டப்பட்டிருந்தது என்பதனையும் சாசனச் சான்றுகள் மூலம் அறிகின்றோம். ஆனால் தென்னிந்தியாவிலே இவ்விருதுப் பெயரினையுடைய சோழர்கோயில்கள் எவையும் காணப்படுபவையாக இதுவரை தெரியவில்லை அல்லது தென்னிந்தியாவிலே ஜனநாதபுரம் என்ற பெயரில் ஏதாவது நகரங்கள் காணப்பட்டிருந்தமைப் பற்றியும் இன்னும் தெளிவு ஏற்படவில்லை. இலங்கையிலே திருகோணமலை, கந்தளாய், பதவியா, மாதோட்டம், நல்லூர் என்பன மும்முடிச்சோழ மண்டலத்தினது பிரதான நிர்வாக நகரங்களாக விளங்கியிருந்திருப்பன. இவற்றுள் நல்லூரைத் தவிர ஏனைய மேலே குறிப்பிடப்பட்ட நகரங்களிலே இருந்திருக்கக் கூடிய சிவன் கோவில்களினது பெயர்கள் சாசனச் சான்றுகளின் அடிப்படையில் வரலாற்றாய்வாளர்களினால் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆனால் நல்லூரைப் பொறுத்தமட்டிலே நல்லூரிலுள்ள ஒரு கோவிலுக்கு விளக்கு எரிப்பதற்காக அவ்வூர் சாந்தன் என்பவனால் சாவாமூவாப் பேராடுகளைத் தானமாக வழங்கிய சம்பவத்தினை யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டு தற்போது யாழ்ப்பாண அரும்பொருளகத்திலே வைக்கப் பட்டுள்ள 1ம் இராசேந்திரனது கல்வெட்டிலிருந்து அறியமுடிகிறது. ( இந்திரபாலா. கா 1971 ) யாழ்ப்பாணத்திலே கமால்வீதியிலேயுள்ள ஓரிடத்திலிருந்து சோழர்கால சிற்பக்கலை மரபினைத் தழுவிய வெண்கல கற் சிற்பங்கள் கண்டுபிடிக்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும் ( இந்திர பாலா கா 1979 ) இத்தகையதோர் அடிப்படையிலே சட்டநாதவீஸ்வரர் கோயில் தொடர்பான தோற்ற வரலாற்றினை ஆராயுமொருவருக்கு இராசராசனது விருதுப் பெயர்களில் ஒன்றான ஜனநாதன் என்பதுடன் இணைந்த ஜனநாதஈஸ்வரம் என்ற பெயரானது பொருத்தமானதுபோல் கொள்ள வைக்கும் அவ்வகையிலே சட்டநாதவீஸ்வரர் கோயிலின் தோற்றகாலத்தினை இலங்கையிலேயுள்ள ஏனைய சோழர் காலத்துக்குரிய சிவன் கோயில்களின் காலத்துடன் இணைத்து நோக்கமுடியும். இருந்தும் தற்போது அமைந்திருக்கும் சட்டநாதவீஸ்வரர் கோவிலின் அமைவிடம்தான் அச்சோழர்காலத்திய ஜனநாதவீஸ்வரத்தின் அமைவிடமாக விளங்கி யிருந்தது என்று கொள்வதிற்கூட பலசிக்கல்கள் உள்ளன. இச்சிக்கல்களை தொல்லியல் அகழ் வாய்வுகள் மூலமே நன்கு தீர்க்கமுடியும் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை

சட்டநாதவீஸ்வரர் கோவிலின் தோற்றம் தொடர்பான சில பிரச்சனைகள் என்ற இந்த ஆய்விலே அக்கோவிலின் பெயர் தொடர்பான சிலப்பிரச்சனைகளை மட்டுமே இங்கு குறிப்பிட முடிந்தது. அவ்வகையிலே முன்வைக்க முடிந்த ஒரு கருதுகோளின் அடிப்படையிலே இக்கோவிலானது சோழர்காலத்துக்குரியதொன்றாக எடுத்துக்காட்ட முயற்சி செய்யப்பட்டமையை இங்கு காணலாம். அவ்வாறான ஒருமுயற்சி நிச்சயமாக வாதப்பிரதி வாதங்கட்குட்பட்டும் என்பதும் தெளிவு. இருந்த போதிலும் தொடர்ந்து செய்யப்படுகின்ற ஆய்வுகளிலேயும் அதன் மூலம் பெற்றுக் கொள்ளிவிருக்கின்ற வரலாற்று விளக்கங்களி லிருந்தும் இவ் ஜனநாதஈஸ்வரம் என்ற பெயரைக் கொண்டு விளக்கியிருக்கக்கூடிய சட்டசநாதேஸ்வரர் கோயிலின் தலவரலாறானது தெளிவுறும் என்பது எமது நம்பிக்கையாகும்.

### அடிக்குறிப்புகள்


*1. மயில்வாகனப் புலவர். (1953) யாழ்ப்பாண வைபவமாலை*

*(பதிப்பு முதலியார் குல சபாநாதன்) பன்னம் 26*

2. ஸ்ரீனிவாசன் C.R. *(1968) சிந்தனை மலர் 2 இதழ் 1 பக் 3*

3. Raghavan M.D. (1967) India in Ceylonese History, Society & Culture P 74 Prof. Indrapila. Karthigesu (1971) Eplgraphia Tamibca, VOII. Part 1. PP 52-56

*4. பேராசிரியர் இந்திரபாலா கா. '' கமால் வீதியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட சைவச் சிலைகள் '' வீரகேசரி (வாரமலர்) 1979 மாசி 11.18.25.*

*5. வளவர்கோன் (1974) சங்கமம் மகாஜனக்கல்லூரி வெளியீடு*

*6. கிருஷ்ணராசா செ. (1980 '' மாதோட்டம் ஒரு தொல்பொருட் களஞ்சியம் '' ) வீரகேசரி (வாரமலர்)*


**சைவ** முன்னேற்றச் சங்கக் கட்டிடம் விஸ்தரிப்பு செய்யப்பட்டு மண்டபத்தின் கீழே இருந்த நால்வர் ஆலயத்தை மேல்மாடிக்கு மாற்றி உள்ளார்கள். அந்த பிரமாண்ட மண்டபத்தில் நால்வர் சிலைகள் மிகவும் சிறப்பாக அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இதே இடத்தில் யோகா வகுப்பு நடத்துவதற்காகக் கீழ் தளத்தில் நல்ல அழகான மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சைவ முன்னேற்ற சங்கத்தின் மண்டபம் ஈஸ்ட்ஹேம் பகுதி மக்களுக்கு பயனுள்ளதாக அமைந்துள்ளது.

பதிப்பாசிரியர்

# நிதி உதவி ஆய்வுக்கூடத்தில் இலங்கையை மட்டம்தட்டிய ஐரோப்பிய நாடுகள்

நிதி உதவி ஆலோசனைக் கூட்டத்தில் இலங்கையை ஐரோப்பிய நாடுகள் கூட்டமைப்பு மூக்குடைப்பு செய்து மட்டம் தட்டின.

## ஆய்வுக் கூட்டம்

இலங்கைக்கு நிதி உதவி அளிக்கும் சர்வதேச நாடுகளின் ஆய்வுக் கூட்டம் கடந்த 2 நாட்களாக இலங்கையின் கல்வி நகரத்தில் நடந்தது. இலங்கைக்கு அதிக அளவில் நிதி உதவி, கடன் உதவி அளித்து வரும் அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகள், உலக வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர். இந்தியா சார்பில் வெளியுறவு அமைச்சகத்தின் மூத்த அதிகாரியான கூடுதல் செயலாளர் தினேஷ் குமார் ஜெயின் கலந்து கொண்டார்.

நேற்று முன்தினம் நடந்த முதல் நாள் கூட்டத்தில் அதிபர் மகிந்தா ராஜபக்சே முன்னிலையில் அமெரிக்காவின் தூதர் ராபர்ட் பிளாக், ஜப்பானிய தூதர் கியோஷி அராகி, மற்றும் உலக வங்கியின் தெற்காசியத் துணைத் தலைவர் பிரபுல் படேல் ஆகியோர் இலங்கையின் தற்போதைய அணுகுமுறைக்கு கண்டனம் தெரிவித்தனர். இலங்கை அராசங்கம் ராணுவ நடவடிக்கை மூலம் விடுதலைப்புலிகளின் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்க வேண்டும் என்று யோசனை தெரிவித்தனர்.

## விரக்தி

இலங்கைக்கு அதிக அளவில் உதவிகள் அளித்து வரும் முக்கிய உறுப்பினர்களான ஜப்பானும், உலக வங்கியும் வெளிப்படையாக நடந்த கூட்டத்தில் இவ்வாறு எச்சரிக்கையும், கண்டனமும் தெரிவித்து இருப்பதால் இலங்கை அரசாங்கம் விரக்தியில் இருப்பதாகக் கூட்டத்தில் கலந்து கொண்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மூக்குடைப்பு

இந்த நிலையில் நேற்று 2 –வது நாள் கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தில் ஐரோப்பிய நாடுகள் கூட்டமைப்பு இலங்கையின் மூக்கை உடைத்து, மட்டம் தட்டின. வழக்கமான கூட்டத்துக்கு அனுப்பும் தூதர்களை அனுப்பாமல், 2–ம் நிலை அதிகாரிகளை அனுப்பி இவ்வாறு அவமதிப்புச் செய்துள்ளன.

இலங்கை அராசங்கத்தின் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகள் மற்றும் ராணுவ நடவடிக்கைகளை அதிகரித்து வருவதன் காரணமாக அந்த நாட்டின் மீது ஐரோப்பிய நாடுகள் அதிருப்தி அடைந்துள்ளன. ஆகவே இந்த கூட்டத்துக்கு 2–ம் நிலை அதிகாரிகளை அனுப்ப ஐரோப்பிய நாடுகள் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் முடிவு செய்தனர் என்று ஒரு அதிகாரி தெரிவித்தார்.

## இலங்கை வேண்டுகோள்

ஆனால் இலங்கை தனக்கு நிதி உதவிகள் அளித்து வரும் அந்த நாடுகளை அமைதிப் பேச்சு வார்த்தையில் பின்னடைவு ஏற்பட்டு இருப்பதால் அதையும், நாட்டின் முன்னேற்றத்துக்கு அளித்து வரும் உதவிகளையும் ஒப்பிட வேண்டாம் என்று இந்த கூட்டத்தில் கேட்டுக் கொண்டது.

இதைத் தூதர்கள் ஏற்க மறுத்துவிட்டனர். நாங்கள் அளிக்கும் நிதி ராணுவத்தின் பலத்தை அதிகரிக்க பயன்படவில்லை என்பதை இலங்கை உறுதிப்படுத்த வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

**நம்பிக்கை மூலை**

ஒரு பள்ளி ஆண்டு விழா. பெற்றோரும் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஓர் ஓவியர் சிறப்பு விருந்தினராக அழைக்கபட்டிருந்தார். முதலில் ஒரு புன்னகை முகத்தை வரைந்தவர் ஒரு சில கோடுகளை மட்டும் திருத்தி அதனை அழும் முகமாக மாற்றினார். முதல் வரிசையில் இருந்த ஒரு மாணவனைத் தவிர அனைவரும் கரவொலி எழுப்பினர்.

விசாரித்தபோது அவன் சொன்னான். என் பெற்றோர் உங்களை விட திறமைசாலிகள். ஒன்றிரண்டு கடும் வார்த்தைகளைச் சொல்லியே என் புன்னகை முகத்தை அழும் முகமாக்கி விடுவார்கள். பெற்றோர் வெட்கத்தில் தலை கவிழ்ந்தனர்.

---

எவர் ஒருவர் தனது கடமைகளைச் சரிவர செய்கின்றாரோ, அவருக்கு உரிமைகள் தானாகவே வந்தடையும். செயல்தான் கடமை, உரிமை அதில் பழுத்த பழம்

பொறுமையும், விடாமுயற்சியும் மலைகளையும் தகர்க்கும்.

உண்மையான தொண்டின் மூலம்தான் அதிகாரம் கிடைக்கும்.

காந்தியடிகள்

# கிருஸ்ணபிள்ளை


## - அம்ரிதா ஏயெம்

டேய், அந்த டம்ளரெல்லாத்தையும் கெதியாய் எடுத்து வாடா? என்ற அரக்கச் சத்தம் கிருஸ்ணபிள்ளையை நோக்கி அந்த தடியன் முதலாளியின் பானை வயிற்றிலிருந்து வந்தது. கெதியாய் எடுத்துக் கொடுக்க வேணும், இல்லாட்டி இந்த தடியன் காதை மின்னிவிடுவான். இல்லாட்டி பணிஸ், பாண் வக்கிற பட்டறை பொட்டிக்கு பின்னால என்ன கூட்டிக்கு போய் நாலு சாத்து சாத்துவான். சாத்துப்பட்டத வெளிய சொல்லவும் கூடாது. சொன்னால் திரும்பி அடிச்சி வெளியே அனுப்பிவிடுவான்.. அனுப்பினா என்ற வயிறுதான் காயும்.

நான் கிருஸ்ணபிள்ளை, இந்த கெம்பஸ் கென்ரீன்ல ஒரு நாளைக்கு பத்து ரூபாவுக்கும் மூணு வேளைச் சாப்பாட்டுக்கும் வேல செய்றன். இந்தக் கெம்பஸ்ல படிக்க அக்காமாரும் அண்ணணன்மாரும் கதச்சிச்கிருக்க அந்த வட்டமான மேசயவிட என்ற உயரம் என்னவோ அர அடிதான் கூட. ராவையில ரெண்டு மணிக்கி எழும்பி, ராவு புளிக்க போட்ட மாவ எடுத்து ரொட்டி வீசி, கிளாஸ் கழுவி, சாப்பாட்டு பிளேட் துறைச்சி, அதுக்கு மேலே லன்ச் பேப்பர் போட்டு சாப்பாடு கட்டி அத வெறுங்காலோட அந்தக் கறுத்த தார் வீதியால வெயிலுக்குள்ள தலைக்கு மேல வச்சி சுமந்து மெயின் கென்ரீனுக்கு கொண்டு போயி, பின்ன நான் வேல செய்யிற கென்ரினுக்கு சாமான் தட்டுபட்டா மதிலுக்கு மேலால பாய்ஞ்சி கடைக்கு போய் , மீண்டும் மதிலுக்கு மேலால ஏறி கொண்டு வந்து, எல்லாம் செஞ்சி முடிக்கையில ராவு பத்து மணி வேற. அதுக்கிடையில கெம்பஸ்ல படிக்க அண்ணன்மார ஏச்சு வேற. என்ர சம்பளமோ பத்து ரூபா. ஆனா அந்த தாடிக்கார அண்ணன் ஒரு நாளக்கி பத்து கோல்லீப் வாங்கிறவரு. பத்துக்கும் அம்பத்து அஞ்சி ரூபா வரும். என்ர சம்பளம் ஒண்ணேமுக்கா கோல்லீப். பதினாலு வயசிற்கு கீழே சின்னப் பிள்ளயள் வேல செய்யப்போடாதாம், செஞ்சா பொலிஸ்ல புடிச்சிக் குடுக்கலாமாம் எண்டு அந்த கண்ணாடிக்கார அண்ணன் கத்திக்கிட்டு இருப்பாரு. ஒரு வேள அவன் புடிச்சிச்குடுத்து, எனக்கு வேல போனா என்ர வயிறு காயும் எண்டுபோட்டு ரிப்போட் பண்ணாமலும் விட்டிருக்கலாம்.

நான் கிருஸ்ணபிள்ளை. வயது பத்து, இன்னேரம் நாலாம் வகுப்பு படிக்கணும். ஆனா படிக்கல. கென்ரீன்ல எச்சிக்கல்ல கழுவுறன். நான் படிக்காட்டியும் படிப்புக் கூடின இடத்துக்கும் எனக்கும் என்னவோ ஒரே ராசிதான். பத்து வருசத்துக்கு முன்னால இந்த கெம்பஸின் 13ம் நம்பர் ரூம்லதான் ஒரு வெள்ளி கிழமை நான் பிறந்தேன். நானும் அம்மாவும் ரெத்தத்தில துவைஞ்சி கிடக்கிற நேரத்திலதானெ அப்பாவும் ரெத்தத்தில துவைஞ்சி கிடந்தாராம். அந்த மாமரக் கட்டையில, நெஞ்ச வளத்தாட்டி கத்தியால குத்திச் சாவச்ச 153 பேரில என்ர அப்பாவும்தானெ ஒராள். இந்தக் கெம்பஸ்ல இருந்துதானாமே அப்பாவையும் மத்த எல்லாரையும் கூட்டிக்கிட்டு போனாங்களாம். அம்மா தந்த அப்பாட போட்டோவ நான் இன்னும் பத்திரமா வச்சிருக்கன். அப்பா என்ன வடிவு. நடுவால தல புறிச்சி, எருமகடா மீசையோட என்ன வடிவு. அப்பாவ கத்தியால குத்திச் சாவைக்காம இருந்திருந்தா நான் எச்சிக்கல்ல கழுவுவேனோ என்னமோ? நான் பிறந்த கெம்பஸ்லயே நான் வேலை செய்றன். ஒரு வித்தியாசம் எல்லாரும் படிச்சி முடிச்சிட்டுத்தான் கெம்பஸ் வருவாங்க. நான் படிக்காமலே வந்து அடிபட்டு ஏச்சுப்பட்டு கல்ல கழுவுறன்.

ஏனெண்டா நான் கிருஸ்ணபிள்ளை எச்சில் பாத்திரம் தொறைக்க பொறந்த எச்சம். என்னோட படிச்சவனுகளுக்கெல்லாம் றுசாந்தன். தினோஜன்



அபராஜிதன் எண்டு பேரிருக்க எனக்கு மட்டும் கிருஸ்ணபிள்ளை, கிழட்டு பேர். அம்மாவுக்கு நெனவு தெரிஞ்சிருந்தா நல்ல மொட்டான பேர் வச்சிருப்பாவுக்கும். எனக்கு பேர் வக்கற ரைம்ல அவட உடம்புக்கும் மனசுக்கும் வலி கட்டி மயங்கிக் கிடந்தாவாமே. ஏன்ர பாட்டிதான் இந்த பேர வச்சதாம். அப்படியே பதியுறவனுகளும் பதிஞ்சிட்டானுகளாம். ஆனா கிருஸ்ணன் என்டா பகவானாம். நான் பகவானின் பிள்ளையாம். கிருஸ்ணனை எப்படியும் கிருஸ்ணன் எண்டுதானே கூப்பிடுறம் எண்டு அந்த அழகான செத்தையில மாட்டியிருக்க குழந்தை கிருஸ்ணன் படத்தைக் காட்டி பாட்டி கதை சொல்லுவா. அந்த வடிவான குழந்த மாதிரியா நான் இருக்கன். அந்தக் குழந்தைக்கோ நெற்றியில மட்டும்தான் கறுத்தப்பொட்டு. எனக்கோ உடம்பு, முகம் பூரா கரிச் சட்டிப் பொட்டு. 'கிருஸ்ண' எண்டா உலகத்த ஆக்கி அழிக்க சக்திகொண்ட அரச எஜமானன் எண்டு கருத்தாம் எண்டு பாட்டி சொல்லுவா. அப்ப நான் அரச எஜமானின் பிள்ளையா? அப்பிடியெண்டா என்ர கோட்ட கொத்தளமெல்லாம் எங்கே? முட்டக்கோது வீசுற மூலையும், கொத்து ரொட்டிக் கல்லுமா?

நான் ரெண்டாம் வகுப்பு வரயும்தான் படிச்சன். முதலாம் வகுப்புல ரெண்டு ஏயும் நாலு பீயும். நான் கெட்டிக்காரன். ஆனா படிக்க இப்ப விருப்பமில்ல. ஒரு நாள் வகுப்பில இருக்கன். டீச்சர் அப்ப படிச்சி தந்திகிட்டு இருக்கா. டப், டப்பெண்டு குண்டு சத்தம். அதுக்குப் பின்னே படபடவெண்டு சத்தம். அப்ப ஒரு ஓடு உடைஞ்சி நொறுங்கி சனோஜாவுக்கு தலையில விழுந்து ரத்தம் ஒடிச்சு. கொஞ்ச நேரத்துக்கு பின்ன றுசாந்தன்ட காலுக்குள்ள என்னவோ வெடிச்சி கால இருந்து ரெத்தம் வழியத் தொடங்கிச்சு. றுசாந்தன்ட சேட்டு களிசான் புள்ளா ரெத்தம்தான். றுசாந்தனும், சுனோஜாவும அண்டக்கிக் கத்தின கத்துவ இன்னமும் ஞாபகத்தில இருக்கி. போன ஜனவரி மாசம் முதலாம் தேதி சாமிக்கு பூச்சாத்த வீட்டு முற்றத்திற்கு மல்லிகைப் பூ ஆயப் போன என்ர பள்ளியில மூண்டாம் வகுப்பு படிக்க அந்தப் பிள்ளையும மண் மூடப் பக்கம் இருந்து வந்த குண்டு பட்டு சாகற ரைம்ல இப்பிடித்தானே கத்திச் செத்திருக்கணும். றுசாந்தனும். சனோஜாவும் கத்தி அபராஜிதன் மயங்கிக் கிடக்கற ரைம்ல அப்ப சிவப்பு நெருப்புக் கட்டி ஒண்டு சத்தத்த தூக்கிக்கிட்டு என்ர சொத்தைக்கி நேராய்ப் போய் வெடிச்சிது. அண்டு பள்ளிக்கு பயந்த நான்தான், அதுக்கு பிறகு பள்ளிப் பக்கமே போனதில்ல. இப்படி என்னப்போல எத்தன பிள்ளையள் பள்ளிக்கி போகாம இருக்காங்களோ தெரியாது. கோரப் பல்லு முளச்சி பெரிய நகம் வளர்த்து, நாக்கால ரெத்தம் ஒழுக ஒழுக ராவையில சங்கிலிக் கறுப்பன் வருவானாம் எண்டு பாட்டி கத சொல்லுவா. எனக்கு பள்ளி எண்டா சங்கிலிக் கறுப்பன் போல கனக்கா தரம் பயம். அப்பா செத்தோடனேயெ அம்மா ரெண்டாம் கலியாணம் செஞ்சா. சித்தப்பா மப்புல ஒருவனை கத்தியால குத்திட்டு மறியலுக்கு போயிட்டாரு. அம்மா பொறகு கஸ்டப்பட்டு வெளிநாடு போனா. ரெண்டு வருசமாகியும் இன்னமும் ஒரு கடிதம் கூட வாறதேயில்ல. ஒரு வேள கடிதம் வந்தாலும் எங்களுக்கு கிடக்கிதில்ல என்னமோ? இப்பிடி எத்தனை கிருஸ்ணபிள்ளைகளின்ர அம்மாக்களின்ர கடிதங்கள் கிருஸ்ணபிள்ளைகளின்ர பாட்டிமாருக்கும், கிருஸ்ணபிள்ளைகளுக்கும் கிடைக்கிகறதில்லையோ? அம்மா இருந்திருந்தாவெண்டா, இல்லாட்டி அம்மா காசு அனுப்பினாவெண்டா இல்லாட்டி அம்மா அனுப்பின காசு கிடைச்சிருந்தா இந்தக் கென்ரீன்ல கறிகொதிச்சி சட்டியிலிருந்து அடிச்ச வெக்க என்ட முகத்தில பட விட்டிருப்பாவோ என்னமோ?

அண்டைக்கி ஒரு சேர் அவர்ர மகன கென்ரீனுக்கு கூட்டிக்கி வாறாரு. என்ர வயசிதான் அவனுக்கு இருக்கிம் போல. சேர் அவனுக்கிட்ட கேட்ட கேள்ளிவியொண்டுக்கு அவனுக்கு விட தெரியல்ல. எனக்கு தெரிஞ்சிது. நான் அப்ப அவனோட கெட்டிக்காரன்தானெ. அப்ப நான் ஏன் இப்படி இருக்கன்? அவன் வடிவா சிவத்த ரீசேட், மஞ்சள் கோடு பச்சக் கரை போட்ட சோட்ஸ் போட்டு வடிவா இருக்கான். என்ர உடுப்போ எப்பவும் ஊத்தையாத்தானே இருக்கிம். ரெண்டு உடுப்பத் தவிர வேறு உடுப்பு இல்லையே. என்ர உடுப்பிலயும் சிவப்பு , பச்சை. மஞ்சள் எல்லாம் கோடு கோடா, கரை கரையா இருக்கிம். ஆனா, அது கரட் பீற்றூட்டாலயும், மஞ்சளாலயும், மரக்கறியாலயும் வச்சதாக்கும். நான் ஏன் இப்பிடி? அவன் ஏன் அப்பிடி? நான் மாறிப் பொறந்திருந்தா? அந்த சேர்ற மகன் இந்த வேலையெல்லாம் அடிபட்டு ஏச்சுப்பட்டு செய்வானா? எல்லாம் பாட்டி சொல்லுற கிருஸ்ணன்ட வேலையாக்கும்.

கிருஸ்ணபிள்ளை என்பது நான் மட்டுமா? கிருஸ்ணபிள்ளைகள் பிறக்கிறதே எச்சில் கல்ல

கழுவவும், குறப்பால் ஊத்தவும்தானே. ஏன் மணியக்காட சாப்பாட்டுக் கூட சுமக்கும் தியாகும் கிருஸ்ணபிள்ளை. விக்னேஸ்வராட கிளாஸ் கழுவுற இளங்கோவும் கிருஸ்ணபிள்ளை. பூச்சி அண்ணனுக்கு ராவைக்கு இரவு ரெண்டு மணியிலிருந்து ரொட்டி வீசும் கண்ணனும் கிருஸ்ணபிள்ளை. ரசீத் காக்காவுக்கு அரிசரிக்க அமீரும் கிருஸ்ணபிள்ளை. மயில் அண்ணனிற்கு விறகும் அரிசிம் சுமக்கும் சத்யனும் கிருஸ்ணபிள்ளை. ராசிக் காக்காட பீங்கான் கழுவுற பிரபாகரனும் கிருஸ்ணபிள்ளை. முரளிர கென்ரீன்ல மாவாட்டுற அருளும் கிருஸ்ணபிள்ளை. பாலகிருஸ்ணனின் சாப்பாட்டு பார்சல்களை லாம்பு பிடிச்சி ராவையில கெம்பசுக்கு கொண்டு போற பாலுவும் கிருஸ்ண பிள்ளை. கிருஸ்ணபிள்ளை என்பது நான் மட்டுமில்ல.

டேய் என்னடா? ஒரு அஞ்சாறு டம்ளர் எடுக்க இவ்வளவு நேரம்? என அந்த தடிச்ச வயிறன் காத முறுக்கி தலையில குட்டுறான். குட்டுச் சத்தம் பெரிசாக் கேட்டது. ஆனா வலிக்கல்ல. ஏனென்டா, நான் கிருஸ்ணபிள்ளை, அடக்குப்படவும் அடிபடவும் பிறந்தவன். ●

பதிப்புத் தொழில் உலகம் - மாசி, 2038

## எலிசபெத் மகாராணி பாராட்டிய *தமிழர் தகவல்*

இலண்டன், புறொம்லியில் மாதந் தோறும் *தமிழர் தகவல்* இதழ் வெளிவருகிறது. 4000 படிகளை இலண்டன் வாழ் தமிழரிடையே இலவயமாக விநியோகிக்கிறார்கள்.

40 பக்கங்களும் வழுவழு தாளில், வண்ணப் படங்களுடன் கிறவுண் 1/4 அளவில், மேலே தடித்த வழுவழு தாளில் வண்ண அட்டை.

இலண்டனில் வாழும் தமிழர் நடத்தி வருகின்ற பல இதழ்களுள், முதன்மை இதழாக, *தமிழர் தகவல்* விளங்குகிறது.

அரவிந்தன் ஆசிரியர், திருமுருகன் அறிவகம் வெளியீட்டாளர், சென்னையில் அச்சாகி, இலண்டனுக்குப் போய், அங்குள்ள 250,000 எண்ணிக்கையான தமிழர் நடுவே புகழ் பூத்த இதழாக வெளிவருகிறது.

விக்ரோறியா மகாராணி முன்பு தமிழில் *அரிச்சந்திரன்* நாடகத்தை அரங்கேற்றி, சேர் பட்டம் பெற்றவர் ஈழத்தவரான குமாரசாமி. ஆனந்தக் குமாரசாமியின் தந்தை இவராவர். 150 ஆண்டுகளுக்கு முன் இந் நிகழ்வு நடந்தது.

21ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இன்றைய எலிசபெத் மகாராணி பாராட்டும் அளவுக்கு, *தமிழர் தகவல்* இதழ், புகழ் பூத்த இதழாக வெளிவந்திருக்கிறது.

மகாராணியின் 80ஆவது பிறந்த நாளையொட்டி, *தமிழர் தகவல்* சிறப்பு இதழ் வெளியானதைப் பாராட்டிய எலிசபெத் அம்மையார், தமிழர் தகவல் தொடர்ந்து வெளிவர வேண்டும் எனவும் வாழ்த்தியுள்ளார். பதிப்பாசிரியரான சிவானந்த சோதிக்கு இந்த வாழ்த்திதழ் வந்து சனவரி இதழில் வெளியாகி உள்ளது.

கிருபானந்த வாரியாரின் நூற்றாண்டுக்குச் சிறப்பிதழ் வெளியிட்டுப் பலரின் பாராட்டையும் சிவானந்த சோதி பெற்றுள்ளார்.

கிருபானந்த வாரியார், இலண்டனிலிருந்து சென்னைக்கு விமானத்தில் பறந்து வருகையில் உயிர் பிரிந்தது. 1978 முதலாக ஐந்து முறை இலண்டனுக்குக் கிருபானந்த வாரியார் பயணித்துள்ளார். ஐந்தாவது முறை 19.10.1993இல் இலண்டன் புறப்பட்டார். 07.11.1993இல் சென்னை திரும்புகையில் சிவபதம் அடைந்தார்.

இலண்டனுக்கு எப்பொழுது சென்றாலும் திரு. அரங்கநாதனின் இல்லத்திலேயே வாரியார் தங்குவார்.

*தமிழர் தகவலில்* மற்றுமொரு பெரியாரைப் பற்றிய விவரங்கள் வெளிவந்துள்ளன. 1949ஆம் ஆண்டு இலங்கையில் தோன்றிய தமிழரசுக் கட்சியின் முதலாவது



பொதுச் செயலாளரான திரு. வி. நவரத்தினத்தைப் பற்றிய முழுமையான தகவல்களை இந்த இதழில் காணலாம். முடிசூட்டினால் போல அமைந்துள்ளது நவரத்தினத்தார் பற்றிய கவிஞர் காசி. ஆனந்தனின் கவிதை.

*தமிழர் தகவல்* பற்றிய மேலும் விவரங்களுக்கு: 41 Haddington Road, Bromley, Kent BR1 5RG, UK தொலைப்பேசி: 0044 20 8480 3320

— மறவன்புலவு க. சச்சிதானந்தன்

# பிரிந்துபோன திருமதி குணா

பல வருட காலம் வெம்பிளியில் கலாநிதி நித்தியானந்தன் தலைமையில் சிறப்பாக இயங்கி வருகின்ற இலண்டன் தமிழ் நிலையத்தின் முதியோர் அமைப்பில் இருந்து திருமதி குணா வேலுப்பிள்ளை பிரிந்து சென்று வேறொரு அமைப்பை ஹரோ பகுதியில் ஆரம்பித்துள்ளார். டாக்டர் நித்தியானந்தன் தலைமையின் கீழ் இயங்கும் இலண்டன் தமிழ் நிலையத்தின் முக்கிய உறுப்பினராக திருமதி குணா வேலுப்பிள்ளை இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. ஒரு நிர்வாகத்திற்கு கீழ் இருந்து கொண்டு அதே நிர்வாகத்துக்கு எதிராக மொட்டைக் கடிதம் போடுவதை விட இவ்வாறு பிரிந்து போவது மிகவும் சிறந்தது என LCT இன் உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார்.

சென்ற வருடம் இவ்வமைப்பின் தலைவராக சீவரத்தினம் நியமிக்கப்பட்டு பின்னர் அவர் பதவி விலக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வருடம் ஜனவரி பிற்பகுதியில் ராஜன் மனுவேற்பிள்ளை தலைவராக தெரிவு செய்யப்பட்டார். திருமதி குணா வேலுப்பிள்ளையுடன் 15 உறுப்பினர்கள் பிரிந்து சென்றுள்ளதாக மேலும் அறியப்படுகின்றது.

நன்றி **லண்டன் - குரல்**

# அலைகள் தாலாட்டும் ஆத்மலிங்கம்



கர்நாடகா மாநிலத்தின் மேற்கு பகுதியில் அரபிக் கடலின் ஆனந்தமயமான வருடலில் திளைத்திருக்கிறது முருடேஸ்வர் என்று வழங்கப்படுகிற திருத்தலம். வருவாய்த்துறை ஆவணங்களில் இன்றளவும் ' மாவள்ளி ' என்றே குறிப்பிடப்படுகிறது. முருடேஸ்வர், சிவபெருமான் ஆத்மலிங்கமாக எழுந்தருளியுள்ள தலமாகையால் அவருடைய திருநாமத்தையே இந்த திருத்தலமும் பெற்றிருக்கிறது.

மங்களூரிலிருந்து உடுப்பி வழியே வரும் போது சிறிது தூரம் கடற்கரையை அளந்தபடி 160.கி.மீ பயணம் செய்தால் இடப்புறம் கம்பீரமாக அமைந்திருக்கிறது ஆர்.ஷெட்டி மருத்துவமனை. பக்கத்திலேயே அலங்கார வளைவு ' முருடீஸ்வர் ஆலயம் ' என்று தமிழிலும் வரவேற்கும். அங்கிருந்து சிறிது தூரம் சென்றால் வானத்தை அளந்தபடி, அமர்ந்த நிலையில் உள்ள பரமேஸ்வரன் திருமேனியைக் காணலாம்.

ஒரு கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ள இந்த காங்கிரீட் திருமேனியின் உயரம் 123 அடி ! உலகிலேயே மிக உயரமான சிவபெருமான் திருமேனி இதுதான் என்கிறார்கள்.

கடற்கரையில் அபிரிமிதமான இயற்கை அழகோடு போட்டியிடுகிற மாதிரி இந்த செயற்கை அழகுகளைப் புதிது புதிதாக உருவாக்கிக் கொண்டேயிருக்கிறார்கள். இராவணனிடம் ஆத்மலிங்கத்தைப் பெறுகிற அந்தண சிறுவனான மகா கணபதி, கயிலை மலையின் கீழே தவமியற்றும் முனி புங்கவர்கள் என்று மனம் போன படியெல்லாம் ஆளுயரத்துக்கும் மேலே சிற்பங்களை வடித்து வைத்திருக்கிறார்கள்.

சிவபெருமான் திருமேனியின் இடபுறமிருந்து பார்த்தால் மாலைக் கதிரவன் கடலில் மறையும் அற்புதக் காட்சியைக் காணலாம். சிவபெருமானின் பீடத்தின் அடிப்பகுதியில் குகை போல் சுற்றிலும் அமைத்திருக்கிறார்கள். உள்ளே நுழைய இப்போதைக்கு பொது மக்களுக்கு அனுமதி இல்லை. கொட்டிக் கிடக்கும் கொள்ளை அழகாக இந்தத் திருத்தலப் புராண நிகழ்ச்சிகளைப் பத்தடி உயரச் சிற்பங்களாக, அற்புதமான வண்ண மெருகோடு உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொன்றும் பேசும் சிற்பங்கள் !

**தலப்புராணம்**

வழக்கமாக பலரும் கேள்விப் பட்டிருக்கக் கூடிய கதைதான். இராவணேஸ்வரன் சிவபெருமானின் அருளுக்காக தவமிருந்து பெற்ற ஆத்மலிங்கத்தை, நாரதர் - விநாயகர் கூட்டு சதியால் இலங்கைக்கு கொண்டு போக முடியாமல் செய்த கதை.

இந்த ஆத்மலிங்கம் இப்போது மண்ணுக்குள் பெருமளவு மறைந்து

பசுவின் காதுமடல் மட்டும் தெரிகிற மாதிரி, மஹாபலேசுரர் என்கிற திருநாமத்தோடு வழங்குகிறது. ' கோகர்ணா ' என்ற (பசுவின் காது) தலத்தில் இதைக் காணலாம்.

இராவணேஸ்வரனின் தாயார் மிக உன்னதமான சிவபக்தை. தினமும் கடற்கரை மணலில் சிவலிங்கத் திரு மேனியை உருவாக்கி வழிபட்டு வந்தார். கடல் அலைகள் அந்த திருமேனியை உருக்குலைத்து விடுவது கண்டு அந்த தாய் வருந்த, உடனே மகன் '' அம்மா ! கலங்காதே சிவபெருமானைத் தவமிருந்து உனக்கு ஆத்ம லிங்கத்தையே பெற்று வந்து தருகிறேன். அது கலையாது அழியாது '' என்று சொல்லிவிட்டு கயிலாயம் புறப்பட்டான்.

கடுந்தவம் இயற்றி அந்த ஆத்மலிங்கத்தை சிவபெருமானி டமிருந்து பெற்றுக் கொண்டான் இராவணேஸ்வரன். கோடி சூர்ய சந்திரர்களின் ஒளியைத் தன்னகத்தே கொண்டதாம் அந்த ஆத்மலிங்கம். சும்மாக் கொடுத்து விடுவாரா – சிவபெருமான் ?

சிவலிங்கத்தை ஒரு பேழையில் வைத்து மூடி, ஒரு துணியால் போர்த்திக் கட்டி, கைகளில் எடுத்துக் கொண்டு நடந்து போக வேண்டும். வழியில் எக்காரணம் கொண்டும் பூமியில் அதை வைக்கக் கூடாது. அப்படி வைத்து விட்டால் அந்த இடத்தி லேயே ஆத்மலிங்கம் வேரூன்றி விடும் என்பது நிபந்தனை.

நிபந்தனைகளை மனதில் கொண்டவனாய் ஆத்மலிங்கத்தோடு தெற்கு நோக்கி சென்றான் இராவணேஸ்வரன். நாரதரும் மற்ற தேவதைகளும் கூடி ஆலோசனை செய்து, ஆத்ம லிங்கம் இலங்கைக்கு போக விடாமல் தடுக்க முயன்றார்கள்.

சப்த கோடீஸ்வரம் என்னும் இடத்தில் நண்பகல் கடமைகளை முடித்துவிட்டு இப்போதைய கோகர்ண க்ஷேத்திரத்துக்கு இராவணேஸ்வரன் வந்தபோது, மகாவிஷ்ணு தன்னுடைய சுதர்சன சக்கரத்தால் சூரியனை மறைத்து விட்டார். இராவணனும் மாலை நேரம் ஆகிவிட்டது என்று எண்ணி, மாலைக் கடமைகளை நிறைவேற்ற விருப்பம் கொண்டான்.

ஆத்மலிங்கத்தை கீழே வைத்தால் ஆபத்து. என்ன செய்வது என்று யோசித்தபோது தேவர்களின் திட்டப்படி ஓர் அந்தண சிறுவனாக எதிர்பட்டார் விநாயகர். '' தம்பி ! இதைச் சற்று நேரம் வைத்திரு. சந்தியா வந்தணம் முடிந்து வந்து வாங்கிக் கொள்கிறேன். இதை தரையில் மட்டும் வைத்துவிடாதே '' என்று சிறுவனைக் கேட்டுக் கொண்டான் இராவணேஸ்வரன்.

'' ஆகா! அப்படியே செய்கிறேன். ஆனால் இது கனமாக இருக்கிறது. நான் மூன்று முறை உங்களை அழைப்பேன். அதற்குள் வந்து வாங்கி கொள்ளாவிட்டால் கீழே வைத்துவிடுவேன் '' என்றது அந்த சாதுப் பிள்ளை.

ஆனால், இராவணேஸ்வரன் மாலைக் கடன்களை முடிப்பதற்குள் மூன்று முறைக் கூவி விட்டுப் பிள்ளையார் ஆத்மலிங்கத்தைக் கீழே வைத்துவிட்டார். ஆத்திரமாக வந்தது இராவணேஸ்வரனுக்கு. பூமியில் இருந்து அதை எடுக்க முயன்று தோற்றுப் போனான். மிகுந்த பலசாலியான தன்னா லேயே அதை எடுக்க முடிய வில்லையே என்ற ஆத்திரத்தில் பேழையின் மூடி, சுற்றியிருந்த துணி, அடிப்பெட்டி, கட்டுக் கயிறு என்று ஒவ்வொன்றாக எடுத்து நாலா திசைகளிலும் வீசி எறிந்தான். சிவலிங்கம் பூமிக்குள் நன்றாக அழுந்திக் கொண்டு விட்டது. இராவணேஸ்வரனின் பலத்துக்கே சவாலாக அந்த லிங்கம் அமைந்ததால் கோகர்ண க்ஷேத்திரத்தில் சிவபெருமானின் திருநாமம் ' பகாபலேஷ்வர் ' என்று ஆனது !

பேழையை எறிந்த இடத்தில் அது ஒரு சிவலிங்கமாக உருமாறி 'ஸஜ்ஜேஸ்வரர்' என்கிற திருநாமம் பெற்றது. பேழையின் மூடி போய் விழுந்த இடத்தில் ' குணவந்தேஸ்வரர் ' என்கிற திருநாமத்தோடு ஒரு சிவலிங்கம் உருவானது. சுற்றி கட்டியிருந்த கயிறு போய் விழுந்த இடத்தில் உருவான சிவலிங்கம் தாமேஸ்வரர் என்ற பெயர் பெற்றது. துணி விழுந்த இடம் தான் முருடேஸ்வரம். இறைவனின் பெயர் இங்கே முருடேஸ்வரர் என்று வழங்கப்பட்ட போதிலும் சரியான சொல் 'ம்ருடேஸ்வரர் ' என்பதுதான். ' ம்ருட ' என்றால், இராவணேஸ்வரனால் கிழித்து வீசப்பட்ட துணி என்று பொருள் தருகிறது தல வரலாற்று குறிப் பேடு. ' ம்ருட 'என்ற சொல்லுக்கு ' மகிழ்ச்சி ' என்று கூட பொருள் சொல்கிறார்கள்.

சிவராத்திரி அன்றைக்கு வில்வ தளத்தால் இந்த சிவபெருமானை அர்ச்சித்து வழிப் பட்டால் மரண பயம் அகன்று, சொர்க்கம் கிட்டும் என்ற நம்பிக்கை உண்டு.

அதனால், துணிக் கந்தையாக வந்து விழுந்து சிவலிங்கத் திரு மேனியாக உருவான இறைவனை, இத்தலத்தில் கடவுள்களும், முனிவர்களும் தொடர்ந்து ஏழு நாட்கள் பூஜை செய்து வழிபட்டு விண்ணுலகம் சென்றார்களாம். அந்த ஏழு நாட்களும் தேவர் களுக்காக சிவபெருமான் இருந்து அருள்பாலித்த இடம் 'கந்துக கிரி' என்று வழங்கப்படுகிறது.

இராவணேஸ்வரனின் ஆத்திரத்தின் விளைவாக வீசி எறியப்பட்ட பொருள்கள் அனைத்துமே சிவலிங்க வடிவம் பெற்றன. கோகர்ண க்ஷேத்திரமும் மற்ற நான்கு இடங்களும் கடற் கரையை ஒட்டி அருகருகே

உள்ளன. இந்த ஐந்து சிவாலயங்களையும் ஒரே நாளில் தரிசனம் செய்வது நிறைந்த நலன்களை வழங்கும் என்கிறார்கள்.

கந்துககிரியில் புலித் தோலாடையின் மீது வீற்றிருக்கும் சிவபெருமானின் திருமேனி அழகும் வடிவ நேர்த்தியும் பிரமிப்பூட்டக்கூடியவை. உள்ளே இரும்புக் கம்பிகளைத் திணித்து உருவாக்கியுள்ள கான்கிரீட் கலை வடிவம்தான் என்றாலும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஓர் அற்புதக் கலைப் படைப்பு.

ஆத்மலிங்கம் பூமிக்குள் வேரோடி நிலைபெற்ற கோகர்ணா க்ஷேத்திரத்திலிருந்து தெற்கே 51 கி.மீ தொலைவில் உள்ளது இந்த கந்துக கிரி. இங்கே 'அகோரர்' என்கிற பெயரில் முருடீஸ்வரர் எழுந்தருளியுள்ளார்.

அமைதியாக அலையைத் தவழ விடுகிற கடலும் திருக்கோயிலின் ஓர் அங்கமாக திகழ்கிறது. கடலை இங்கே அக்னி தீர்த்தம் என்று குறிப்பிடுகிறார்கள். சமுத்திர ராஜன் இந்த கந்துக கிரிப் பகுதியை அப்படியே அள்ளி அணைத்து மகிழ்கிற மாதிரி சுற்றிச் சூழ்ந்து பரந்திருக்கிறது கடல்! இதில் புனித நீராடுவது வழக்கமாக உள்ளது. கடலைத் தவிர கமண்டல தீர்த்தம், ஜாடதீர்த்தம், பீமதீர்த்தம், சங்கு தீர்த்தம் என்றெல்லாம் சுற்றிலும் இருப்பதாக சொல்லப்பட்டாலும் கந்துக கிரி ஆலயத்துக்குப் போகிற வழியில் இடப்புறத்தில் எழில் மிகு மைய மண்டபத்தோடு ஓர் அழகான தெப்பக் குளத்தை மட்டுமே நாம் காணமுடிகிறது.

கருவறையில் முருடேஸ்வரரின் மூன்று திருமேனிகளை ஒன்றன்பின் ஒன்றாக தரிசிப்பது ஆனந்த அனுபவம். முதலில், தரையோடு தரையாக என்கிற மாதிரி ஆவுடை அமைப்புக்குள் அமிழ்ந்து காணப்படுகிறது ஆத்மலிங்கம். இதற்கு மேலே தொங்கும் தாரா பாத்திரத்தின் துளைகளின் வழியேதான் அபிஷேகம். ஆவுடைக்குள் மலர்களைத் தூவி அர்ச்சனை செய்து, அவற்றையே எடுத்துப் பிரசாதமாக தருகிறார்கள்.

ஆத்மலிங்கத்துக்குப் பின்னால் அருமையான வெள்ளிக் கவசம் அணிந்த உற்சவ மூர்த்தி. அவருக்குப் பின்னால் முறுக்கிய மீசை, உருட்டிய விழிகளோடு அலங்கார மூர்த்தியாக அருள் பாலிக்கிறார் முருடேஸ்வரர். கொடி மரத்தின் வழியே பலிபீட நேர்க்கோட்டில் அழகாக இவரை தரிசித்தப்படியே வரலாம். தனிக் கருவறையில் பார்வதிதேவி அருள் பாலிக்கிறார். தலவிருட்சமாக ஆலமரம் கிளைப்பரப்பி நிற்கிறது.

இதை ஓர் ஆன்மீகத் தலமாக மட்டுமின்றி சுற்றுலாத் தலமாகவும் மேம்படுத்தி இருக்கிறார்கள். கடலை ஒட்டியே தங்கும் விடுதிகளும் உண்டு.

நன்றி
கல்கி தீபாவளி மலர் (2006)

## வாசகர் கடிதம்

காவலூர் நவரத்தினத்தின் அட்டைப்படம் தமிழர் தகவலின் தரத்தை உயர்த்தி விட்டது

மு. நேமிநாதன்

நாட்டுப்பற்றாளர் மரியாதை காவலூர் நவரத்தினத்துக்கு போதுமா? இன்னும் அதிகமாக கொடுத்திருக்கலாமே !

தமிழர் தகவல் வாசகர்கள் பலர்

### கனடா டொரான்டோவில் காவலூர் நவரத்தினத்துக்கு இரங்கல் கூட்டம்

27.01.2007 அன்று காலஞ்சென்ற நவரத்தினம் அவர்களுக்கு மாபெரும் இரங்கல் கூட்டமும் முத்திரை வெளியீடும் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சி டொரான்டோவில் உள்ள தீவுப் பகுதி மக்களால் நடத்தப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

உலக வங்கியும், இலங்கைக்கு உதவி செய்யும் ஜப்பான் உட்பட்ட நாடுகளும் இலங்கை தமிழர் பிரச்சனையை தீர்க்க அழுத்தம் கொடுத்துள்ளன. இந்தக் கூற்றுக்கு பதில் சொன்ன ஜனாதிபதி மகிந்த ராஜபக்சே புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை நாங்கள் விடுவித்துள்ளோம். அதற்கு உதவி செய்யுங்கள் என்று உலக நாடுகளை கேட்டுள்ளார். இந்த ஆணவ அறைகூவலுக்கு என்ன பதில் சொல்வது

### உடைந்தது !

இலங்கையில் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து 18 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்தனர்.



நன்றி ! நன்றி ! நன்றி !

கடந்த 43 மாதமாக தொடர்ந்து எமது பத்திரிக்கையை விமர்சனம் செய்து வரும் தீபம் தொலைக்காட்சிக்கு தமிழர் தகவல் தமது நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறது.

பொன்மொழி
அடுத்த இதழில் வெளிவரும்

தன் பங்கு தாவென்ற தம்பியும்
தம்பியோடு வாழா தமையனும்
வல்லாமை பேசும் மனையாளும்
சொல்லாமல் வந்த கூற்றவன்



# நீ இறக்கவில்லை

-கோவிலூர் செல்வராஜன்

தமிழீழம் கலங்கிப் போச்சு பாலா அண்ணா - தமிழ்
தரணிகூட அதிர்ந்து போச்சு பாலா அண்ணா
தாயகத்தைக் காப்பதற்கு பாலா அண்ணா - உன்
காயத்தையே அழித்தவன் நீ பாலா அண்ணா

புலத்தில் வாழும் மக்களுக்கும் பாலா அண்ணா - நீ
புத்துயிரைக் கொடுத்து நின்றாய் பாலா அண்ணா
களத்திலாடும் வீரருக்கும் பாலா அண்ணா - நீ
உளத்தில் உரம் பாய்ச்சி நின்றாய் பாலா அண்ணா - நீ
இறக்கவில்லை இறக்கவில்லை பாலா அண்ணா - எங்கள்
இதயங்களில் வாழுகின்றாய் பாலா அண்ணா

பேச்சுவார்த்தை மேசைகளில் பாலா அண்ணா - தமிழ்
மூச்சுத்தானே முனைப்பெடுக்கும் பாலா அண்ணா - உன்
பேச்சைக்கேட்டு எதிரிகூட பாலா அண்ணா
மூர்ச்சையாகிப் போனதுண்டு பாலா அண்ணா - நாங்கள்
மறக்கவில்லை மறக்கவில்லை பாலா அண்ணா - உன்
மனத்தில் உள்ள தாகமதை பாலா அண்ணா

கிழக்கில்தானே பிறந்தவன் நீ பாலா அண்ணா - பின்பு
வடக்கில் சென்று வாழ்ந்தவன் நீ பாலா அண்ணா
வடகிழக்கைக் காக்க எழுந்தவன் நீ பாலா அண்ணா
கிடக்கிறாயே உயிர்துறந்து பாலா அண்ணா - நீ
இறக்கவில்லை இறக்கவில்லை பாலா அண்ணா - எங்கள்
இதயங்களில் வாழுகின்றாய் பாலா அண்ணா

தலைவன் பேச்சை எடுத்துச் சொல்ல பாலா அண்ணா - இனி
தமிழர்களில் யாருளரோ பாலா அண்ணா
நகைச்சுவையில் தேர்ந்தவன் நீ பாலா அண்ணா - உன்
மனச் சுமையை நாம் அறிவோம் பாலா அண்ணா - நாங்கள்
மறக்கவில்லை மறக்கவில்லை பாலா அண்ணா - உன்
மனத்தில் உள்ள தாகமதை பாலா அண்ணா

அட்டையில்

## சத்ய சாய்பாபா கருணாநிதி சந்திப்பு.



பழுத்த பகுத்தறிவாதியான கருணாநிதியை அவரது வீட்டுக்கே போய் சாய்பாபா சந்திப்பார் என்று முன்பே யாராவது சொல்லியிருந்தால் யாரும் அதை நம்பமாட்டார்கள்.

போனார்... பார்த்தார்... அன்பைப் பொழிந்தார்... முதல்வரின் மனைவி தயாளு அம்மாள் குனிந்து கால் தொட்டு வணங்கிய போது கனிவோடு ஆசீர்வதித்தார். அதை முதல்வரும் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

சென்னையின் தாகம் தீர்க்கும் கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை முழுமைப் படுத்துவதற்காக 200 கோடி ரூபாய் வரை சத்யசாயி அறக்கட்டளையில் இருந்து பாபா தந்ததற்குப் பாராட்டி நடந்த விழாவில் குடும்பத்துடன் பங்கேற்றார் கருணாநிதி. அடுத்து, சென்னையின் அழகைக் கெடுக்கும் கூவத்தையே சென்னை நகரின் அழகுச் சின்னமாக மாற்றிட, தயங்காமல் பாபாவிடம் நிதி உதவி கேட்டார்.

இந்தியாவே நன்கு அறிந்த நாத்திகவாதியும் உலகம் முழுவதும் பிரபலமான ஆத்திகவாதியும் ஒரு மேடையில் பரஸ்பரம் பாராட்டிக் கொள்ளும் போது... இரு தரப்பு நம்பிக்கை கொண்டவர்களுக்கு என்னவிதமான நெருடல்கள் எழுந்திருக்கும் என்பது சொல்லித் தெரியவேண்டியது இல்லை. ஆனால் முதல்வர் கருணாநிதி அந்த விழா மேடையிலேயே அதற்குப் பொருத்தமான ஒரு விளக்கம் தந்தார்.

கடவுளை நான் ஏற்றுக் கொள்கிறேனா என்பது பிரச்சினை அல்ல. கடவுள் என்னை ஏற்றுக்கொள்கிற அளவுக்கு நான் நடக்கிறேனா என்பதுதான் பிரச்னை. நான் அப்படி நடந்துகொண்டால் கடவுள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்கள் நம்மை ஏற்றுக்கொள்வார்கள் ! என்பதுதான் அந்த விளக்கம்.



## நடிகை ஷில்பா ஷெட்டி

இங்கிலாந்தின் சேனல் - 4 டெலிவிஷன் நிறுவனம் நடத்திய பிக்-பிரதர் நிகழ்ச்சியில் முதலிடம் பிடித்து, ரூ. 3 கோடி பரிசு வென்று இருக்கும் இந்திய நடிகை ஷில்பா ஷெட்டியின் பூர்வீகம் தமிழ்நாடு.

பாலிவுட்டில் கிட்டத்தட்ட 40 படங்களில் கதாநாயகியாக நடித்திருக்கும் ஷில்பாவுக்கு 31 வயது. இன்னும் மணமாகவில்லை. ஆனால் யாராவது கல்யாணப் பேச்செடுத்தால் உடனே கண்கலங்கி விடுகிறார். நாங்கள் மும்பையில், ஏழ்மை நிலையில் இருந்தபோது எனக்குத் திருமணத் ஏற்பாடுகள் நடந்தன. மாப்பிள்ளை வீட்டார் வந்தனர். மணமகனைப் பார்த்த மாத்திரமே எனக்குப் பிடித்துப்போனது. இரண்டு வீட்டாரும் கலந்து பேசி, திருமண தேதி கூட முடிவாகிவிட்டது. ஆனால் திருமணம் நடைபெறவில்லை. மாப்பிள்ளை வீட்டார் கேட்ட வரதட்சிணையை எங்களால் கொடுக்க முடியாமல் போனதால் என் திருமணம் நின்றுபோனது. கல்யாணக் கோலத்தில் மணவறை வரை சென்று வெறுங்கழுத்துடன் வீடு திரும்பினேன். அப்போது நான் பட்ட வேதனை, துயரங்கள் சொல்லி மாளாதவை என்றபடி ஷில்பா கண்கலங்கினார்.

அவர் இப்போது ரூபாய் 3 கோடிதான் பரிசு வென்றுள்ளார். ஆனால், மொத்தத்தில் ரூ. 50 கோடிக்கு சொந்தக்காரர். சாதிக்க நினைக்கும் பெண்களுக்குத் தடைகள் ஏது?

## தமிழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் புதிய தலைவர்

## நாக சிறிகெங்காதரன்



சமீபத்தில் நடை பெற்ற தமிழ்ப்பாட சாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் புதிய தலைவராக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் புகழ்பெற்ற பழைய மாணவரான திரு. நாகலிங்கம் சிறிகெங்காதரன் அவர்கள் தெரியப்பட்டுள்ளார். இலங்கையின் சுமார் அறுபது தமிழ்ப் பழைய மாணவர் சங்கங்களை உள்ளடக்கிய தமிழ்ப் பாடசாலைகள் விளை யாட்டுச் சங்கத்தை பதினைந்து ஆண்டுகளின் முன்பாக உருவாக்கியவர்களில் இவரும் ஒருவராவார். இந்தச் சங்கத்தின் நிருவாகத்தில் மிக அதிக காலம் இருப்பவரான கெங்கா, சங்கத்தின் செயலாளராகவும் ஏழு ஆண்டுகள் சிறப்புடன் செயற்பட்டிருக்கின்றார்.

இவர்கள் வருடா வருடம் இரண்டு விளையாட்டு விழாக்களை மிகச் சிறப்பாக நடாத்தி வருகின்றனர். இந்த விளையாட்டுப் போட்டிகளில் பல நூற்றுக்கணக்காண இளைஞர்களும் யுவதிகளும் பங்குகொண்டு வருகின்றனர். இவர்கள் ஈழத்தமிழர்களுக்காக கிளிநொச்சியில் ஒரு விளையாட்டுக் கல்லூரியை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

TSSAயின் புதிய தலைவரான கெங்கா இருபது வருடங்களிற்கு முன் தனது பாடசாலையான மகாஜனக் கல்லூரிக்கு இங்கு ஒரு பழைய மாணவர் சங்கத்தை நண்பர்களுடன் இணைந்து உருவாக்கினார். மகாஜனப் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளராகவும் பன்னிரண்டு ஆண்டுகள் இவர் கடமையாற்றியுள்ளார்.

காலம்சென்ற அன்ரன் பாலசிங்கத் துடன் இணைந்து எழுபதுகளின் பிற் பகுதியில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடு பட்ட கெங்கா 83யுலை கலவரத்திற்குப் பின்னான காலப் பகுதியில் இங்கே தமிழர் போராட்டத்திற்கு ஆதரவான ஊர்வலங்களையும் பிரச்சாரங்களையும் முன்னெடுத்த ஈழப் பிரச்சார அமைப்பினைத் ( ESC ) தொடங்கி யவர்களில் ஒருவர் என்பதுடன் அதன் செயலாளராகவும் ஐந்து ஆண்டுகள் செயற்பட்டுள்ளார்.

மிக இளமைக்காலம் முதல் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் செயற்பட்ட கெங்கா தான் வதியும் லூயிசம் பகுதியில் அமைந்துள்ள சிவன் கோவிலை ஆரம்பித்தவர்களில் ஒருவருமாவார். தான் பிறந்த ஊரில் மிக இளமைக் காலத்திலேயே கலைக்கும் இலக்கியத்திற்குமாக கலைப்பெரு மன்றத்தையும் விளையாட்டிற்காக சூட்டிங் ஸிரார் விளையாட்டுக் கழகத்தை உருவாக்கி இவற்றின் செயலாளராகவும் பலஆண்டுகள் சிறப்பாகச் செயற்பட்டுள்ளார்.

தனது திருமண வெள்ளிவிழாவின் நினைவாக தெல்லிப்பழைக் கிராமம் பற்றி "வயற்காற்று" என்கின்ற ஆவண நூலினை எழுதி வெளியிட்டுள்ளார். நாற்பது ஆண்டுகளிற்கு மேலாக தொடர்ந்து பொதுச் சேவையில் தீவிரமாக ஈடுபட்டுள்ள கெங்கா தமிழர் தகவல் சஞ்சிகையின் வளர்ச்சியிலும் அக்கறை கொண்டவர். இவரை தமிழர் தகவல் மனமார வாழ்த்துகின்றது.



**சங்கர குருக்கள் அவர்கள் முதன் முதலில் ( 1989 ) இலண்டன் முருகன் கோயிலில் நான்காண்டுகள் பதவியேற்றபின் மீண்டும் தமிழ்நாடு சென்றுவிட்டார். மீண்டும் ரூட்டிங் முத்துமாரி அம்மன் கோவில் நிறுவனர் சீவரத்தினத்தின் அழைப்பை ஏற்று 96இல் இலண்டன் வந்து முத்துமாரி அம்மன் கோவிலை ஸ்தாபித்து அந்த கோவிலின் முழு வளர்ச்சியிலும் பெரிதும் அக்கரை கொண்ட அவர் 2002இல் கோயிலிலிருந்து விலகி தமிழ்நாட்டுக்குச் சென்றுவிட்டார். லண்டனுக்கு வரும் குருமார்கள்**

யாரென்றாலும் ஒரு கோயிலில் இருந்து நீக்கப்பட்டால் அவர் எப்படியும் வேறு ஒரு கோயிலை ஸ்தாபித்து லண்டனிலேயே நிற்பதற்கு முயற்சி செய்வார்கள். ஆனால் சங்கர குருக்கள் மீண்டும் தமிழ் நாட்டுக்குச் சென்று விட்டு 2005இல் ஈஸ்ட்ஹேம் முருகன் கோயிலுக்கு வந்து சேவையாற்றுகிறார். அவரின் பெண்ணுக்கு அண்மையில் திருவண்ணாமலையில் மிகவும் சிறப்பாக திருமணம் நடைபெற்றது. அந்தக் காட்சியை அட்டையில் காண்கிறீர்கள். இத்திருமண நிகழ்ச்சிக்கு டூட்டிங் பகுதியில் இருந்து அபி எக்சேன்ஜ் சிறீ, கண்ணன், தேவி, ஈஸ்ட்ஹேம் பகுதியில் இருந்து சிதம்பர பிள்ளை அவர்கள் மனைவியுடன் மற்றும் பலரும் வந்திருந்தனர்.

இந்த திருமணத்தை ஈஸ்ட்ஹேம் கோயில் பிரதம குருக்கள் நாகநாத சிவாச்சாரியார் அவர்கள் முன்னின்று நடத்திவைத்தார்கள். தமிழ்நாட்டின் பிரபல சிவாச்சாரியார் பிச்சைக் குருக்கள் உட்பட பலர் வந்திருந்தார்கள்.

## திருநாவுக்கரசு அவர்கள்



83 கலவரத்தில் பல நாடுகளில் எமது மக்கள் அகதிகளாக தஞ்சம் புகுந்தபோது நாங்கள் தமிழ்நாட்டில் அண்ணாநகரில் தஞ்சம் புகுந்தோம். அங்கே சென்ற நேரத்தில் எமக்கு ஒரு இரண்டு மாதத்திற்கு முன்னர் கொழும்பிலிருந்து அண்ணா நகருக்கு குடியேறியது திருநாவுக்கரசு அவர்களின் குடும்பம். எங்கள் நட்பு எதேச்சையாக அண்ணா நகர் பஸ் ஸ்டான்டில் ஆரம்பித்தது. 83 கலவரத்தின் பயங்கர இழப்பினால் அண்ணா நகரில் வந்து குடியேறினார்கள். கொழும்பு ஹைட் பார்க் கார்னரில் மிகவும் பிரபலமான அரசன் பிரிண்டர்ஸ் உரிமையாளர் இவர். இலங்கையில் உள்ள அச்சுத்தொழில் வர்த்தகத்தில் மிகவும் முன்னணியில் இருந்தவர் மட்டுமல்லாமல் அகில இலங்கை அச்சு இயந்திர சாலை உரிமையாளர் சங்கத் தலைவராகவும் கடமையாற்றியவர். அச்சுக் கலையில் இலங்கையில் ஒரேயொரு விற்பன்னர். இவர் தனது அச்சுக் கலையை நியூஸ்லாந்தில் மேற்கொண்டிருந்தார். அதற்கு முன்னர் யாழ் விவேகானந்தா அச்சகத்தின் பங்குதாரராகவும் இருந்தவர். அண்ணா நகரில் 15 வருட காலமாக வாழ்ந்து அதன் பின்னர் மீண்டும் இலங்கை சென்று கடந்த 28.12.2006இல் இலங்கையில் காலமான செய்தி தமிழர் தகவலுக்கு மிகுந்த துயரமான செய்தியாகக் கிடைத்தது. இவருக்கு மனைவியும் இரண்டு பெண் குழந்தைகளும் ஒரு மகனும் உள்ளனர். இவருடைய ஆழந்த அனுபவம் என்னை சில நேரத்தில் பிரமிப்பூட்ட வைத்தது. எனது தமிழர் தகவல் முதல் பிரதியைப் பார்த்து அதற்குரிய ஆலோசனையை வழங்கியர். தமிழ்நாட்டின் பல அச்சு இயந்திரப் பாட சாலைகளில் பகுதி நேர வகுப்பெடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழில் மிகவும் நகைச்சுவையுடன் எழுதவும் பேசவும் ஆற்றல் கொண்டவர். அண்ணா நகரில் இருந்த காலத்தில் அவரிடம் ஒரு நாளாவது நகைச்சுவை கேட்காத நாட்கள் இல்லை என்று சொல்லலாம்

பதிப்பாசிரியர்
சிவானந்த சோதி

---

ஒரு மனிதன் டாக்டரைத் தேடி வந்தான்.

டாக்டர்... எனக்கு ஒரு பிரச்னை ?

என்ன... பிரச்னை?

நான் செத்துப் போயிட்டேன் !

டாக்டருக்கு தூக்கி வாரிப் போட்டது. அவர் புரிந்து கொண்டார். இவனிடம் நயமாகப் பேசித்தான் சரிசெய்ய வேண்டும் என்று முடிவு செய்து கொண்டார். பேச ஆரம்பித்தார்.

இங்கே பாருப்பா ... நான் நாற்காலியில் உக்காந்திருக்கேன்... நீ ஸ்டூல்லே உக்கார்ந்திருக்கே... நானும் நீயும் பேசிக் கொண்டிருக்கிறோம். அதனாலே நீ சாகலே...!

இல்லே சார் நீங்க பேசிக்கிட்டிருக்கிறது என்னோட ஆவிக்கிட்டே...!

டாக்டருக்கு மேலும் அதிர்ச்சி... ரொம்பவும் வில்லங்கம் புடிச்ச ஆசாமியா இருக்கானே...! மறுபடியும் ஆரம்பித்தார்.

இங்கே பாருப்பா... செத்துப் போனவங்களுக்கும் உயிரோட இருக்குறவங்களுக்கும் வித்தியாசம் இருக்குமா ? இருக்காதா?

இருக்கும் !

என்ன வித்தியாசம் ?

நீங்கதானே டாக்டர்... நீங்களே சொல்லுங்க!

இவனை அறிவியல்பூர்வமாக நிரூபித்து புரியவைக்கலாம் என்று முடிவு எடுத்த டாக்டர், மறுபடியும் ஆரம்பித்தார்.

இதோ பாருப்பா... உயிரோட இருக்குறவங்களுக்கு உடம்பிலே ரத்தம் ஓடும் ! செத்துப் போனவங்களுக்கு ரத்தம் ஓடாது... சரியா ?

சரி !

உனக்கு அதைப் பரீட்சை பண்ணிப் பார்க்கலாமா ?

பார்க்கலாம் !

இப்போது டாக்டர் உற்சாகமானார்.

அவனுடைய ஒரு விரலைப் பிடித்தார். ஸ்பிரிட்டால் துடைத்தார். ஒரு ஊசியால் லேசாகக் குத்தினார். ரத்தம் வந்தது. டாக்டர் மகிழ்ச்சியோடு, பார்த்தாயா... ரத்தம் வந்துடுச்சி !

ஆமாம் வந்துடிச்சி !

என்ன நினைக்கிற என்னைப் பத்தி ?

நீங்க ஒரு திறமையான டாக்டர்தான் !

ஹி ! எதனாலே அப்படிச் சொல்றே ?

செத்துப்போன உடம்புலேயே ரத்தம் வர வழைச்சிட்டீங்களே

தென்கச்சி சுவாமிநாதன்

# இராஜபக்சேயின் வருகையும் தமிழகத்தின் கடமையும்

மறவன்புலவு க. சச்சிதானந்தன்

(தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழு முன்னாள் உறுப்பினர்)

தெற்காசியக் கூட்டமைப்பின் 14ஆவது உச்சி மாநாடு இந்த ஆண்டு ஏப்ரல் 3, 4 நாள்களில், புதுதில்லியில் நடைபெற உள்ளது. இதற்காக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் தெற்காசியாவின் ஒவ்வொரு நாட்டுத் தலைவரையும் நேரடியாகச் சென்று அழைப்பைக் கொடுத்து வருகிறார்.

புதிதாக இணைந்துள்ள ஆப்கானிஸ்தானுடன், இந்தியா, இலங்கை, நேபாளம், பாகிஸ்தான், பூடான், மாலத்தீவு ஆகியன இந்தக் கூட்ட மைப்பில் உள்ள ஏழு நாடுகள்.

ஆண்டுக்கு ஒருமுறை உச்சி மாநாடு நடக்கவேண்டுமென்பது மரபு. ஆனாலும் இதுவரை 13 மாநாடுகளே நடந்துள்ளன.

1985இல் முதலாவது உச்ச மாநாடு வங்காள தேசத் தலைநகர் தக்காவில் நடைபெற்றது. அடுத்த 10 ஆண்டுகளில் 8 உச்சி மாநாடுகளே நடைபெற்றன. அதற்கடுத்த 10 ஆண்டுகளில் 5 உச்சி மாநாடுகளே நடைபெற்றன. 22 ஆவது ஆண்டில் 14வது உச்சி மாநாடு நடைபெறப்போகிறது.

நேபாளத் தலைநகர் காத்மண்டுவில், அரண்மனைக்கு எதிலே உள்ள தெற்காசியக் கூட்ட மைப்புத் தலைமையகத்துக்குள்ளே போவோருக்கு உற்சாகமற்ற அலுவலகமாகவே அது காட்சி தரும். சுறுசுறுப்பான கண்ணோட்டமே இல்லாத அலுவலர்கள், வெற்று மேசைகள், விடுப்பில் பலர் என அந்த அலுவலகம் செயற்படாமைக்கு பல்வேறு காரணங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று, தொய்வுகளும் தள்ளிப் போடல்களும் நிறைந்த உச்சி மாநாடுகள்தாம்.

முதலாவது 7,8 திசம்பர் 1985 தாக்கா
இரண்டாவது 16, 17 நவம்பர் 1986 பங்களூர்
மூன்றாவது 2, 3, 4 நவம்பர் 1987 காத்மண்டு
நான்காவது 29, 30, 31 திசம்பர் 1988 இசுலாமாபாத்
ஐந்தாவது 21, 22, 23 நவம்பர் 1990 மாலே
ஆறாவது 21 திசம்பர் 1991 கொழும்பு
ஏழாவது 10, 11 ஏப்ரல் 1993 தாக்கா
எட்டாவது 2, 3, 4 மே 1995 புதுதில்லி
ஒன்பதாவது 12, 13, 14 மே 1997 மாலே
பத்தாவது 29, 30, 31 சூலை 1998 கொழும்பு
பதினோராவது 4, 5, 6 சனவரி 2002 காத்மண்டு
பன்னிரண்டாவது 2, 3, 4, 5, 6 சனவரி 2004 இசுலாமாபாத்
பதின்மூன்றாவது 12, 13 நவம்பர் 2005 தாக்கா

தெற்காசிய நாடுகளுக்குள்ளேயுள்ள இரு தரப்புச் சிக்கல்களே, ஆண்டுக்கு ஒருமுறை நடைபெற வேண்டிய தெற்காசிய உச்சி மாநாடு, பலமுறை ஒத்தி வைப்பதற்குக் காரணமாயின.

நாட்டின் தலைவர் உச்சிமாநாட்டில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என்பது விதியும் மரபும். குடியரசுத் தலைவர் அல்லது பிரதமர் தரத்திலுள்ள தலைவர் கலந்து கொள்ள வேண்டும் என்பதே விதி. அல்லவெனில் அமைச்சர்களின் மற்றும் அதிகாரிகள் மாநாடாகிவிடுமே !

எந்த ஒரு நாடாவது, எந்த ஒரு உச்சி மாநாட்டுக்காவது, தன் உயர் தலைவரை அனுப்ப மறுத்தால் அந்த மாநாடே குலைந்து விடும். ஒத்தி வைக்கப்படும். ஒருமுறையல்ல, பல முறை இத்தகைய ஒத்தி வைப்புகள் நடந்ததால்தான், 22 ஆண்டுகளில் 14ஆவது மாநாடு நடைபெறப்போகிறது.

## முதலாவது எடுத்துக்காட்டு:

2005 பெப்ரவரி 6, 7 இல் தாக்காவில் உச்சி மாநாடு நடைபெறுவதாக இருந்தது. 2004 திசம்பரின் ஆழிப்பேரலைத் துயரங்கள் இலங்கை, இந்தியா, மாலத்தீவு ஆகிய நாடுகளில் நீடித்த நிலையிலும் உச்சி மாநாட்டைக் குழப்ப வேண்டாம் எனத் தலைவர்கள் தீர்மானித்தனர்.

நேபாளத்தில் நேரடி மன்னராட்சி 2005 பெப்ரவரி 1 முதல் நடைமுறைக்கு வந்தது. இந்தியாவின் பிரதமர் தாக்கா உச்சி மாநாட்டில் கலந்து கொள்வார் என இந்திய வெளியுறவுச் செயலர் சியாம் சரண் கடைசி நேரத்தில் அறிவித்தார். இந்தியாவின் அயலகங்களில் நிகழ்ந்த அரசியல் மாற்றங்களைக் கருத்தில் கொண்ட பிரதமர் மாநாட்டிற்குப் போக முடியவில்லை எனச் சியாம் சரண் கூறியதும் தெற்காசியக் கூட்டமைப்பே குலுங்கியது. நேபாள மன்னருடன் அருகருகே அமர்ந்தால் நேபாள மக்கள் மனமுடைந்து போவார்கள் எனச் சூசகமாக சியாம் சரண் தெரிவித்தார். அது மட்டுமல்ல, வங்காள தேசத்தில் இந்தியாவுடன் நெருங்கிய உறவு கொண்ட அவாமி லீக்கின் தலைவர்களுள் ஒருவரான, முன்னாள் நிதி அமைச்சர் சாம்சுல் கிபிரியா சனவரிக் கடைசியில் கொல்லப்பட்டார். எனவே தாக்காவில் பாதுகாப்பு முறையாக இல்லை என்பதைத் தில்லி, அலுவலக முறைப்படி தாக்காவுக்கு அறிவித்தது. இதனால்

இந்தியப் பிரதமர் மாநாட்டுக்குப் போக மறுத்தார். மாநாடு திட்டமிட்டபடி நடைபெறவில்லை.

இந்தியப் பிரதமர் உச்சி மாநாட்டுக்குப் போகாத மைக்கு, அவரது அரசுக்குத் துணை நின்ற கூட்டணிக் கட்சிகளே காரணம். போகக் கூடாதென்ற முடிவைப் பிரதமர் எடுக்குமுன் கூட்டணிக் கட்சிகளையும் எதிர்க்கட்சியினரையும் கலந்தாலோசித்தார். இடதுசாரிக் கட்சிகள் இதில் கடும் நிலையை எடுத்திருந்தன. நேபாள மக்களுக்குத் துரோகம் செய்யாதீர்கள் என இடதுசாரிகள் பிரதமரிடம் நேரடியாகக் கூறினர். பிரதமரும் அதற்கு மதிப்புக் கொடுத்தார். திடீரென மாநாடு ஒத்திவைக்கப்பட்டது. பின்னர், 2005 நவம்பர் 12, 13இல் நடந்தேறியது.

இரண்டாவது எடுத்துக் காட்டு:

1999 நவம்பர் 26, 27, 28இல் காத்மண்டுவில் நடைபெறவிருந்த 11ஆவது மாநாடு திட்டமிட்டபடி நடைபெறவேயில்லை. வாஜ்பாய் அப்போது இந்தியப் பிரதமராக இருந்தார். 1998 மே மாதத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் அணுகுண்டுகள் வெடித்துப் பரிசோதித்தன. 1999 மே தொடக்கம் சூலை வரை கார்கில் போர் நடை பெற்று முடிந்திருந்தது. இந்திய பாகிஸ்தான் உறவுகள் மோசமான சூழ்நிலையை எட்டியிருந்தன. இதற்கு மகுடம் வைத்தாற்போல, நவாப் ஷெரீபிடமிருந்து 1999 அக்டோபர் 12இல் முஷராப் ஆட்சிப் பொறுப்பேற்றிருந்தார். இரா ணுவ ஆட்சி பாகிஸ் தானில் வந்ததால் உலகமே அதிர்ந்திருந்த வேளை.

பாகிஸ்தானில் நடந்த இராணுவப் புரட்சியை வரவேற்காத இந்தியா, உச்சி மாநாட்டைக் குலைக்க முயன்றது. தானே நேரடியாக ஈடுபடாமல், அயலவர்களாகிய வங்காள தேசத்தையும், பூடானையும் இந்தியா உசுப்பிப் பார்த்தது. இதை எதிர்த்து இலங்கை அதிபர் சந்திரிகா உறுமினார். அதற்குச் சில வாரங்களுக்கு முன்புதான் முஷராபை வரவேற்றவர் சந்திரிகா. இராணுவப் புரட்சி உள்நாட்டு விவகாரம் அதற்காக உச்சிமாநாட்டைப் பின்போடமுடியா தென்றார் சந்திரிகா. அவர் அப்பொழுது தெற்காசியக் கூட்டமைப்பின் சுழற்சி முறைத் தலைவர்.

பாகிஸ்தானும் மிரட்டியது. ஆனால் இந்தியா விட்டுக் கொடுக்கவில்லை. அந்த உச்சி மாநாடு திட்டமிட்டபடி நடைபெறவேயில்லை. மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் 2002இல் அந்த உச்சி மாநாடு காத்மண்டுவில் நடைபெற்றது.

மூன்றாவது எடுத்துக்காட்டு:

1991 கொழும்பில் நவம்பர் மாதம் ஆறாவது உச்சி மாநாடு நடைபெறவிருந்தது. பிரேமதாசா அப்பொழுது இலங்கையின் குடியரசுத் தலைவர். அவருக்கு இந்தியாவின் மீது உறைப்பான கோபங்கள். 1987இல் இராஜீவின் கொழும்பு வருகையைப் புறக்கணித்துப் பிரதமரான பிரேமதாசா தாய்லாந்து சென்றுவிட்டார். 1990களில் வி.பி.சிங் அரசு பிரேமதாசாவுடன் கடுமையாக நடந்துகொண்டது. 1991 அக்டோபரில் நரசிம்மராவ் பிரதமராக இருந்தார். பிரேமதாசாவுக்குப் பாடம் புகட்ட நரசிம்மராவ் எண்ணினார். பூடானை உசுப்பிவிட்டார். பூடான் மன்னர் உச்சி மாநாட்டுக்குத் தாம் வரவில்லை என அறிவித்தார். 1991 நவம்பர் உச்சி மாநாடு குழம்பியது. பின்னர் திசம்பர் மாதம் கொழும்பில் நடைபெற்றது.

நான்காவது எடுத்துக்காட்டு:

1990களில் மாலத்தீவில் நடைபெற இருந்த ஐந்தாவது உச்சி மாநாட்டைப் பின்போடுவதற்கு பிரேமதாசா காரணராக இருந்தார். இலங்கையில் இந்தியத் தலையீட்டை (1987–1990) ஒப்புக் கொள்ளாத அவர், இந்தியப் பிரதமருடன் அருகருகே உட்கார மறுத்தார். மாலத்தீவு அதிபர் கயூம் கொழும்புக்குச் சென்று பிரேமதாசாவுடன் பேசி, ஒத்திப்போட்ட மாநாட்டை மீண்டும் நடத்தி முடித்தார்.

இராஜபக்சாவின் கொடுங்கோலாட்சி:

இரு தரப்பு உறவுகளை, அரசியலாக்கத் தெற்காசியக் கூட்டமைப்பு உச்சி மாநாடுகள் தொடர்ந்து பயன்பெறும் நிலையில், 2007 ஏப்ரலில் இராஜபக்சே தில்லி வருகிறார். தமிழகத்தில் உள்ளவர்களுக்கு இராஜபக்சா தில்லிக்கு வருவது பிடிக்கவேயில்லை. தில்லி செல்லும் வழியில் தமிழகம் வந்தால் போராட்டங்கள் வெடிக்கும் என்பதைக் கடந்த முறை அவர் தமிழகம் வர முயன்றபோது நடந்த நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டின. தமிழகம் வரத் திட்டமிட்டிருந்த இராஜபக்சா, குருவாயூரிலிருந்த நேரே கொழும்பு சென்றுவிட்டார்.

அன்றைய சூழலில் செஞ்சோலை மீதான குண்டு வீச்சு நிகழ்ச்சிகள் தமிழக மக்களின் உணர்வுகளை பூதாகரமாக தூண்டிவிட்டிருந்தன.

1987 இராஜீவ் – ஜெயவர்த்தனா உடன் படிக்கையை முறித்து ஒன்றிணைந்த தமிழர் தாயகத்தை வடக்கு மாகாணம் என்றும் கிழக்கு மாகாணம் என்றும் பிரித்து, இந்தியாவின் முகத்தில் கரிபூசிய இராஜபக்ச அரசு, 2002 பெப்ரவரி 22இல் இரணில் – பிரபாகரன் புரிந்துணர்வு உடன்பாட்டையும் போர் நிறுத்த உடன்பாட்டையும் மீறி, யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் ஏ9, நெடுஞ்சாலை மூதூர் செல்லும் ஏ15 நெடுஞ்சாலை ஆகியவற்றை மூடி ஏறத்தாழ 7 இலட்சம் தமிழரைப் பட்டினியிலும் நோயிலும் வாடவிட்டு, சம்பூர், மாவிலாறு, வாகரை ஆகிய பகுதிகளைக் கைப்பற்றி ஐரோப்பிய நாடுகளின் முகத்திலும் கரி பூசி உள்ளது.

1952 நேரு – கொத்தலாவெலை ஒப்பந்தம், 1958 பண்டாரநாயக்கா – செல்வநாயகம் ஒப்பந்தம், 1964 சிறீமாவோ – சாஸ்திரி ஒப்பந்தம், 1965 டட்லி – செல்வநாயகம் ஒப்பந்தம் யாவுமே கொழும்பு

அரசுகளால் ஒருதலைப் பட்சமாகக் கிழித்தெறியப்பட்ட ஒப்பந்தங்கள்.

அனைத்துலக நாடுகளின் அனுசரணையுடனான ஒப்பந்தங்களையோ, தமிழர் – சிங்கள ஒப்பந்தங் களையோ கிழித்தெறியச் சிங்கள அரசுக்கு வெட்கம் இருப்பதில்லை.

இத்தனைக்கும் போலி இடதுசாரிகளான 23 பிரிவுகளாலமைந்த இலங்கை இடதுசாரிக்கட்சிகள் இராஜபக்சே அரசுக்கு முண்டு கொடுத்து வருகின்றன. மார்க்சியக் கோட்பாடுகள், லெலினியத் தத்துவங்கள் யாவையுமே வசதியான போர்வைகளாக்கி, சிங்கள – புத்த இனவெறியை முன்னெடுத்துச் செல்ல, பேரினவாதக் கொள்கைகளுக்கு ஆதரவு தர, பொதுவுடமையாளராகக் காட்டிக் கொள்ளும் இந்த 23 பிரிவினரும் தம்முள்ளே போட்டி போடுவதுதான் இலங்கை இடதுசாரி இயக்கத்தின் மெய்நிலை.

இடதுசாரிகளுள் மக்களிடம் அதிகமாக ஆதரவைப் பெற்றவர்கள், மக்கள் விடுதலை முன்னணி (ஜேவிபி)யினர். இவர்கள் ஒற்றையாட்சி இலங்கைக்குள் தமிழர் அடிமைகளாக இருக்க வேண்டும் என்போர். மகிந்த இராஜபக்சாவின் மகிந்த சிந்தனை என்ற தேர்தல் அறிக்கையின் கருவூலர்கள். 1987இல் இந்தியத் தலையீட்டை எதிர்த்தவர்கள், 2002இன் நோர்வேத் தலையீட்டையும் எதிர்ப்பவர்கள், சிங்கள புத்த இன வெறியர்களான இவர்களுக்கு பொதுவுடைமைக் கொள்கைகள் போலிப் போர்வை.

### தமிழர்களைக் கொன்று குவித்த இரத்தக் கறையுடன் இராஜபக்சா:

அல்லலுற்று ஆற்றாது அழுத கண்ணீருடன் ஏதிலிகளாக, 20,000 ஈழத்தமிழர்கள் கடந்த சில மாதங்களில் இந்தியக் கரைகளில் ஒதுங்கியுள்ளார்கள். தொடர்ந்தும் வந்து கொண்டிருக்கின்றனர்.

இலங்கையில் கொழும்பில் விடுதிகளிலும் வீடுகளிலும் தகர டப்பாவுக்குள் அடைத்த மீன்களைப் போல் அடங்கி, அடுக்குகளாக வாழ்கின்ற வசதியுள்ள தமிழர் சிலருள்ளும் பலர் கடத்தப்படுகிறார்கள். கொடுஞ்சிறைக்குள் அடைக்கப்படுகிறார்கள், கண்டபடி சுடப்படுகிறார்கள். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுடப்படுகிறார்கள்.

யாழ்ப்பாணக் குடாநாடு திறந்தவெளிச் சிறைச்சாலையாக, உணவு, மருந்து, கட்டுமானப் பொருள், மின்சாரம், எரிபொருள் தட்டுப்பாடு களுக்கிடையே ஆறரை இலட்சம் மக்களைத் தாங்கி அல்லலுறுகிறது.

வவுனியாவிலும் திருகோணமலை – மூதூர் – வாகரையிலும் இரண்டு இலட்சம் தமிழர் நிர்க்கதியாய்த் தவிக்கிறார்கள். கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தரைக் கடத்தியவர்கள் இருமாத காலமாக விடுவிக்கவேயில்லை. அம்பாறை மாவட்டத்தில் தமிழர் எவரும் அச்சமின்றி உலவவே முடியாத கொடூரச் சூழ்நிலை.

இஸ்ரேல் வழங்கிய கிபீர் விமானங்களும் பாகிஸ்தான் வழங்கிவரும் பல்குழல் பீரங்கிகளும், நாளும் பொழுதும் தமிழ்க் குழந்தைகளையும் பெண்களையும் அப்பாவித் தமிழரையும் குண்டுமாரிப் பொழிந்து கொன்று குவிக்கின்றன. ஈழத்தில் இரத்த ஆறு பாய்கிறது.

இலங்கைத் தீவு முழுவதற்குமான ஆட்சித் தலைவர் என்பதைவிட ஈழத்தமிழரைக் கொன்று குவிக்கும் தலைவர் என இராஜபக்சாவை அழைக்கலாம். அத்தகைய தலைவர் ஏப்பிரலில் வருகிறார், தெற்காசியக் கூட்டமைப்புத் தலைவர்களுடன் கை குலுக்குகிறார்.

பிரேமதாசாவுக்குப் பாடம் புகட்ட 1991இல் ஆறாவது உச்சி மாநாட்டை ஒத்தி வைத்தவர் பிரதமர் நரசிம்மராவ். முஷராபுக்குப் பாடம் புகட்ட 1999இல் பதினோராவது உச்சி மாநாட்டை ஒத்தி வைத்தவர் பிரதமர் வாஜ்பாய். நேபாள மன்னருக்குப் பாடம் புகட்ட 2005இல் பதின்மூன்றாவது மாநாட்டை ஒத்தி வைத்தவர் பிரதமர் மன்மோகன்சிங். அண்டை நாடுகளை வழிக்குக் கொண்டுவர தெற்காசியக் கூட்டமைப்பின் உச்சிமாநாடுகளைப் பயன் படுத்துவதில் முன்னோடி நிகழ்வுகள் பல உண்டு.

இரத்தக்கறைகள் படிந்த கைகளுடன், அனைத்துலக மேற்பார்வையில் எழுதிய உடன் பாடுகளையும் இலங்கை இந்திய உடன்பாடுகளையும் உள்ளூர் உடன்பாடுகளையும் வெட்கமின்றி ஒருதலைப்பட்சமாக முறித்து வரும் அரசுத் தலைவரான இராஜபக்சா தமிழகத்துள் வரவே முடியாது. தமிழகத்துள் வரமுடியாதவர் இந்தியாவின் ஏனையப் பகுதிகளுக்கு வந்து செல்லலாமா ?

1987 இராஜீவ் – ஜெயவர்த்தனா உடன்பாட்டுக்கமைய வடகிழக்கைத் தமிழர் மரபு வழித்தாயகமாக ஏற்க, இந்தியாவின் ஆதரவுடன் நோர்வேயின் அனுசரணையுடன் 2002இல் ஏற்படுத்திய இரணில் – பிரபாகரன் புரிந்துணர்வு உடன்பாட்டை நடைமுறைப்படுத்துக; அதன்பின் இந்தியா வருக என இராஜபக்சாவிடம் நேரடியாக சொல்லவேண்டியது பிரதமர் மன்மோகன்சிங்கின் கடமை; நேபாள மக்களுக்கு 2005லும் பாகிஸ்தான் மக்களுக்கு 1999லும் துரோகமிழைக்கக்கூடாதென்ற அதே நிலையை எடுத்து, ஈழத்தமிழருக்கு இப்பொழுது துரோகமிழைக்க வேண்டாம் என இந்தியப் பிரதமரை வலியுறுத்துவது தமிழகத்தின் தலையாய கடனாகும். ●

**உங்களுக்கு இந்தியாவில் இருந்து எந்த பொருட்கள் வேண்டுமானாலும் தொடர்பு கொள்ளவும்**

**ARS EXPORTS - 9144 26210845**

# மாசி மாதப்பலன் (பெப்ரவரி 15 - மார்ச் 15)

- கணித்தவர் : ஜோதிட ரத்னா - லயன். டாக்டர். கே.பி. வித்யாதரன்
37, மகாலக்ஷ்மி தெரு, தி.நகர், சென்னை - 17. தொலைபேசி : 2434 8877, 24336465

**மேடம்** அதிமேதாவிகளே ! உங்கள் ராசிக்கு பனிரெண்டிலே வெள்ளி இருப்பதால் பணவரவு அதிகரிக்கும். சுபச்செலவுகள் கூடும். விலையுயர்ந்த நவீன சாதனங்கள் வாங்குவீர்கள். வீடு, மனை விற்பது வாங்குவது லாபகரமாக முடியும். கணவன், மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் கிடைக்கும். உத்யோகத்தில் அதிகாரிகளின் அன்பைப் பெறுவர்கள். புது வாய்ப்புகள் கதவைத் தட்டும். மகளுக்கு நல்ல வரன் அமையும். எங்கும் எதிலும் வெற்றி மாலை சூடும் மாதமிது.

**இடபம்** போராளிகளே ! இதுவரை உங்கள் ராசிக்கு எட்டில் நின்று எடுத்த முயற்சிகளை எல்லாம் தட்டி விட்ட செவ்வாய் இப்போது இடம் மாறி இருப்பதாலும் உங்கள் ராசிநாதன் உச்சமாகி இருப்பதாலும் தடைகள் உடைபடும். எதிர்பார்த்த பணம் வரும். கணவன், மனைவிக்குள் நிலவிய குடுமிப்பிடிச் சண்டைகள் நீங்கும். வேலை கிடைக்கும். வியாபாரம் சூடுபிடிக்கும். உத்யோகத்தில் புதிய சலுகை பெறுவீர்கள். ஆபரணம் சேரும். எதிர்பாராத முன்னேற்றம் தரும் மாதமிது.

**மிதுனம்** நியாயவாதிகளே ! உங்கள் ராசிநாதன் வக்ரமாகி செவ்வாயுடன் சேர்ந்து மறைந்திருப்பதால் எதிலும் கவனம் தேவை. உடல்நிலை பாதிக்கும். பழைய சம்பவங்களை அவ்வப்போது நினைத்து பதட்டப்படவேண்டாம். சேமிப்பு குறையும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி கூடும். வீட்டில் சுப நிகழ்ச்சி நடக்கும். வியாபாரம் சுமார்தான். வேலையாட்களால் பிரச்சனைகள் வரும். உத்யோகத்தில் உயர்வு உண்டு. பயணங்களின் போது நிதானம் தேவைப்படும் மாதமிது.

**கடகம்** கடமை தவறாதவர்களே ! அங்காரகனின் பலம் அதிகரித்திருப்பதால் நினைத்த வேலைகளை சுலபமாக முடித்துவிட முடியும். எதிர்பார்த்த உதவிகள் வி.ஐ.பிக்களிடமிருந்து கிடைக்கும். விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். கணவன் மனைவிக்குள் பனிப்போர் நீங்கும். ஆடை, ஆபரணம் சேரும். லேசாக அடிவயிற்றில் வலி, தலைசுற்றல் வந்து போகும். பிள்ளைகளின் நீண்டகால ஆசைகளை நிறைவேற்றுவீர்கள், வியாபாரத்தில் தடைகள் நீங்கும். உத்யோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சோம்பல் நீங்கி சுறுசுறுப்படையும் மாதமிது.

**சிம்மம்** சிரிப்பழகர்களே ! உங்களின் யோகாதிபதி உச்சமாகி நிற்பதால் சவாலான பல காரியங்களையும் முடிக்கும் ஆற்றல் உண்டாகும். வரவேண்டிய பணம் வரும். சகோதர வகையில் இருந்து வந்த மனத்தாங்கல்கள் விலகும். பிள்ளைகள் கெட்ட பாதையிலிருந்து விடுபடுவார்கள். வீடு, மனை விற்பது, வாங்குவது சுலபமாக முடியும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் தேடி வரும். தொண்டைவலி, காய்ச்சல், நெஞ்சுவலி வந்து நீங்கும். உத்யோகத்தில் வேலைச்சுமை குறையும். கடின உழைப்பால் களிப்படையும் மாதமிது.

**கன்னி** கன்னியாவன்களே ! பூர்வ புண்ணியாதிபதி சுக்ரன் உச்சமாகி நிற்பதால் விரக்தி விலகும். அடி மனதில் நம்பிக்கை பிறக்கும். ஆடை, ஆபரணம் சேரும். கணவன் மனைவிக்குள் கசப்புணர்வு நீங்கும். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். எதிரிகளை வீழ்த்துவீர்கள். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டாகும். வியாபாரத்தில் புது முதலீடுகள் செய்வீர்கள். உத்யோகத்தில் புது பொறுப்புகள் வரும். கனவுத்தொல்லை வந்து நீங்கும். இழந்த செல்வாக்கை பெறும் மாதமிது.

**துலாம்** துடிப்பானவர்களே ! உங்கள் ராசிநாதன் வலுவடைந்திருப்பதால் அலைச்சல் குறையும். பணம் வந்தாலும் சேமிக்க முடியாதபடி செலவுகள் துரத்தும். சூரியனால் சின்ன சின்ன மனக்குழப்பங்களும், பிள்ளைகளால் செலவுகளும், அலைச்சலும் வந்து நீங்கும். யாருக்காவும் காரெண்டர் கையெழுத்திட வேண்டாம். விலையுயர்ந்த பொருட்களைக் கவனமுடன் கையாளுவது நல்லது. வியாபாரத்தில் போட்டிகள் காணப்படும். உத்யோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள். பொறுமை தேவைப்படும் மாதமிது.


**விருச்சிகம்** விருப்பு வெறுப்பில்லாதவர்களே ! உங்கள் ராசிக்கு மூன்றில் செவ்வாய் வலுவாக இருப்பதால் நினைத்ததை முடிப்பீர்கள். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். பொன், பொருள் சேரும். இரத்த அழுத்தம், தூக்கமின்மை வந்து நீங்கும். கல்யாணப் பேச்சு வார்த்தைகள் சுமுகமாக முடியும். பிள்ளைகளுக்கு வேலை கிடைக்கும். சொத்து சேரும். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். உத்யோகத்தில் உங்களுக்கு ஆதரவாக உயரதிகாரி செயல்படுவர். சம்பளம் உயரும். எதிர்பாராத யோகம் தரும் மாதமிது.

**தனுசு** தரமானவர்களே ! தைரிய வீட்டில் சூரியன் சிறப்பாக நிற்பதால் அரசு காரியங்கள் உடனே முடியும். பெற்றோர்களுடன் இருந்த மோதல் போக்கு நீங்கும். ஆடை, ஆபரணம் சேரும். வாகனம் புதிதாக வாங்குவீர்கள். கமிஷன் வகைகளால் பணவரவு அதிகரிக்கும். திருமணத்தடை நீங்கும். சகோதரர் உதவுவார். வழக்கில் வெற்றி உண்டு. வியாபாரத்தில் இருந்த நட்டங்களை சரி செய்வீர்கள். உத்யோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும். உற்றார், உறவினர் மதிக்கும் மாதமிது.

**மகரம்** மண்வாசனை மறவாதவர்களே ! வெள்ளியின் போக்கு திருப்திகரமாக இருப்பதால் புது முயற்சியில் வெற்றியடைவீர்கள். உங்கள் ராசியிலேயே செவ்வாய் செல்வதால் கொஞ்சம் அலைச்சல், முன்கோபமும், உடல்நலக் குறைவும் வந்து போகும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு. வியாபாரத்தில் புது வாய்ப்புகள் கிடைக்கும். பணப் புழக்கம் அதிகரிக்கும். உத்யோகத்தில் அதிகாரிகளின் அன்பிற்கு பாத்திரமாவீர்கள். காதல் இனிக்கும். விடா முயற்சிகளால் வெற்றியடையும் மாதமிது.

**கும்பம்** குலப்பெயர் காப்பவர்களே ! தனம் தரும் வீட்டில் வெள்ளி நிற்பதால் பணவரவு அதிகரிக்கும். லாட்டரி மூலமும் பணம் வரும். பேச்சில் நிதானம் வெளிப்படும். மனைவியின் ஒத்துழைப்பு பெருகும். வாகனம் வாங்குவீர்கள். உங்கள் ராசியிலேயே இரண்டு பாப கிரகங்கள் நிற்பதால் உடல் நலன் பாதிக்கும். வதந்திகள், மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும். உத்யோகத்தில் எதிர்பாராத முக்கியத்துவம் கிடைக்கும். நட்பு வட்டம் விரியும் மாதமிது.

**மீனம்** மீள்பார்வை உள்ளவர்களே ! நீண்ட கால ஆசைகள் நிறைவேறும். வசதி வாய்ப்புகள் பெருகும். திருமணத்தடைகள் நீங்கும். குழந்தை பாக்யம் கிட்டும். வீட்டில் கலகலப்பான சூழல் உருவாகும். நவீன சாதனங்கள், ஆபரணங்கள் வாங்குவீர்கள். வேலை கிடைக்கும். வழக்கில் வெற்றியடைவீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சி பெருகும். புண்ணிய தலங்கள் செல்வீர்கள். வியாபாரத்தில் புது கிளைகள் தொடங்குவீர்கள். உத்யோகத்தில் பதவி உயர்வு உண்டு. அதிரடி முன்னேற்றம் தரும் மாதமிது.


Tharani
Jewellery
54 Ealing Road
Wembley
Middlesex HA0 4TQ
Tel : 020 8902 7111, 8902 6777



GOLDMAN
ESTATE
Property Sales
Property Lettings
Property Management
Commercial Loan Arrangement
Life Insurance
Mortgages
Accountancy
Pensions
Accountancy
S. Manoharan
FCMA ACMI
V Theebaraj
Mortgages
S Mani
Sales & Lettings
உங்கள் வீடு.... உங்கள் வளம்.... உங்கள் மனநிறைவு
219 Broadway, Southhall, Middlesex, UB1 1NB
Tel : 020 8867 7711 020 8867 7733 Fax : 020 8867 7722 020 8867 7744
www.goldmanfinance.com www.goldmanestate.com
info@goldmanfinance.com info@goldmanestate.com
Your home is at risk if you do not keep up your repayment in a mortgage or other loan secured on it

தமிழர் தகவல் இலவச இதழை எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்




















# 2036 கிலோமீட்டர்
# 6 நாட்கள்
# நூறு பவுண்கள்
# ஒரு மினி டூர்
# சென்னை – கன்னியாகுமரி



ஒரு பேப்பர் சென்ற மாதத்தில் நையாண்டிக் கட்டுரையொன்று பழனி முருகனைப் பற்றி போட்டிருந்தது.

இதை வாசித்தவுடன் பழனிக்குப் போக வேண்டும் என்ற ஒரு எண்ணம் எனக்கு ஏற்பட்டது. 28ஆம் தேதி ஈரோ டிராவல்ஸ் அருள்தாஸிடம் இரண்டு விமான டிக்டெட் பெற்றுத் தரமுடியுமா, முதலாம் தேதி தைப்பூசம் பார்க்க வேண்டும் என்று கூறினேன். அவர் ஜெட் விமானத்தில் பம்பாய் வழியாக வரும் இரண்டு விமான டிக்கெட்டுகளை 385 பவுணுக்குத் தந்தார். உடனடியாகப் புறப்பட்டு சென்னை வந்தோம். சென்னை ARR டிராவல்ஸ் பழனிக்கு போவதற்கு நல்ல ஹூண்டாய் வண்டி ஒன்றை மிகவும் அனுபவமுள்ள சாரதியுடன் எமக்குத் தந்தார்கள். 31ஆம் தேதி மாலை நாங்கள் திருவண்ணாமலையானை தரிசித்த பின் இரவு ஒரு மணி அளவில் பழனி சென்றடைந்தோம். எனது மதிப்புக்குரிய நண்பர் ஒருவர் பழனிக்குச் செல்வதற்கு கார் உத்தரவு பத்திரமும் தங்குவதற்கு தரமான ஒரு விடுதியையும் ஏற்பாடு செய்து வைத்தார். அடுத்த நாள் காலை சுவாமி தரிசனம் மிகவும் அற்புதமாக நிகழ்ந்தது. பழனி கோவிலின் சுவாமி தரிசனம் எனக்குப் புதிதல்ல. நான் நினைக்கிறேன் எனக்கு இந்த தரிசனம் ஒரு 42ஆவது தடவையாக இருக்கலாம். கோயிலில் சாமி கும்பிடுவதற்கும் பழனி போன்ற தலங்களில் சாமி கும்பிடுவதற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. கோயிலில் சாமி கும்பிடுவதற்கு எங்கும் போகலாம். லண்டனிலேயே 16 கோயில்கள் இருக்கின்றன. தலங்களின் தரிசனம் கிடைப்பது ஒரு அற்புதமான நிகழ்ச்சியே. இந்த பழனி அனுபவம் பற்றி எழுதும் போது இரண்டு நிகழ்ச்சிகள் என் மனத்தில் வருகின்றது. எனது நண்பர் சிவசுந்தரம் Western Jewellers உரிமையாளர் என்னை RMKV நிறுவனத்திற்குப் புடவை வாங்க அழைத்துச் சென்றார். விமான டிக்கெட்டும் அவரே கொடுத்தார். ஒரு Honda A/c காரில் திருநெல்வேலி நோக்கி பயணம் செய்து கொண்டிருக்கிறோம். விழுப்புரம் தாண்டி திருச்சி நெருங்கும் பொழுது மதுரைக்குப் போகும் சாலையை தவற விட்டுத் திண்டுக்கல் சாலையில் இறங்கி விட்டார். சாரதிக்கு இது பிழை என்று நான் சொன்னேன். திரும்பும் படியும் நான் கேட்டேன். ஆனால் அவர் செவிசாய்க்கவில்லை. திண்டுக்கல் போய் சேர்ந்தது அந்த வண்டி. திண்டுக்கல்லிலிருந்து மதுரை சென்று திருநெல்வேலி செல்ல வேண்டியதுதான் எங்கள் பிரயாண நோக்கம். ஆனால் திண்டுக்கல்லில் இருந்து பழனி 55 கிலோ மீட்டர். நான் சிவசுந்தரத்திடம் சொன்னேன் பழனிக்கு சென்றுவிட்டு திருநெல்வேலி போவோம் என்று . அவர் கேட்டார் பழனிக்குப் போய் என்ன செய்ய போகிறாய் என்று. நான் மொட்டை அடிக்கப் போகிறேன் என்றேன். பழனிக்குச் சென்று மொட்டையடித்துச் சுவாமி கும்பிட்டுத் திரும்பினோம். பழனி முருகன் என்னை அழைத்ததாகத்தான் நான் அதை என் கருத்தில் கொண்டேன். காரணம் தமிழ்நாட்டுக் கோயில்கள் எதையும் கும்பிடும் நிலையில் சிவசுந்தரம் அவர்கள் இருக்கவில்லை. இன்னொருமுறையும் இதேவிதமாக எனது மைத்துனர் விக்னேஸ்வரன் கனடாவில் இருந்து வந்திருந்தார். எல்லாக் கோயில்களையும் பார்ப்பதற்காக சென்றோம். பல கோயில்களுக்குச் சென்று பழனிக்கு வந்தோம். பழனி கோயிலுக்கு இப்போது மூன்று வழியாகப் போகலாம். 1. படிக்கட்டு மூலமாக. 2. விஞ்ச் மூலமாக. 3 கேபிள் கார் மூலமாக. ஒரு மதிய நேரம் சிறப்பு தரிசன டிக்கெட் மற்றும் எந்த ஒரு டிக்கெட்டும் விற்பனையில் இல்லை. நாங்கள் நான்கு பேர். திரும்பி இறங்குவதற்குரிய டிக்கெட்டை எடுக்கப் போகிறோம். அந்த நேரம் எனது மைத்துனர் எனக்கு ஒரு வார்த்தை சொன்னார். திருப்பரங்குன்றம், மதுரை மீனாட்சி கோயில், திருத்தணி, பிள்ளையார்பட்டி இங்கேயெல்லாம் வி.ஐ.பி தரிசனம் கிடைத்தது. உனக்கு பழனி முருகனிடம் செல்வாக்கு இல்லையா என்று. வாயைத் திறந்து மூடவில்லை ஒரு நண்பர் பின்புறம் முதுகைத் தட்டினார். நான் திரும்பி பார்த்தேன் எனக்கே அவரைப் புரியவில்லை. சுவாமி தரிசனம் முடிந்து விட்டதா என்று கேட்டார். நான் சொன்னேன் இப்போது தரிசனம் செய்ய முடியாது என்று கூறிவிட்டார்கள் என்று. அவர் உடனே யாரிடமோ மொபைல் மூலம் தொடர்பு கொண்டார். யாரோ ஒரு அதிகாரி வந்தார். நேரடியாக மூலஸ்தானத்திற்கு அழைத்துச் சென்று சுவாமி தரிசனம் முடித்து அழைத்து வந்தார். இதற்கு பிறகு எனது மைத்துனர் வீடு வந்து சேரும் வரை என்னிடம் எதுவும் பேசவில்லை. இது எல்லாம் எனக்கு கிடைத்த அற்புதங்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

40 வருடங்களுக்கு முன்னர் இதே தைப்பூசத்தை இதே கோயிலில் நடந்து சென்று தரிசித்தது உண்டு. அப்போது வந்த பக்தர்கள் கூட்டம் மாதிரி இப்போதும் உள்ளதுதான் அந்தக் கோயிலின் அற்புதம். இப்படி தரிசங்களை நாங்கள் வலிந்து தரிசிப்பதும் உண்டு. கடவுளாகக் கொடுப்பதும் உண்டு. எனக்கு இப்படித் தரிசனங்கள் பல கிடைத்துள்ளன. அந்த அனுபவங்களை அவ்வப்போது எழுதுகிறேன். என்னோடு பல பேர் வந்து தரிசனம் செய்துள்ளார்கள். அவர்கள் மிகுந்த உயர்ந்த நிலையிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதை நான் கட்டுரை எழுதும் போது அவ்வப்போது வாசகர்களுக்கு தெரிவிக்கிறேன்.



தமிழ் நாட்டிலிலுள்ள தலங்களுக்குச் சென்று தரிசிக்க விரும்புவோருக்கு எந்த காலத்தில் எந்த தரிசனத்தால் பூரண பலன் கிடைக்கும் என்பதற்கு விளக்கம் உண்டு.

**தைப்பூசமும், பங்குனி உத்திரமும் பழனி**
**சித்திரை மாதம் மதுரை மீனாட்சி**
**கந்த சஷ்டி திருச்செந்தூர்**
**ஆடிக்கிருத்திகை திருத்தணி**
**கார்த்திகை தீபம் திருவண்ணாமலை**
**ஆனி உத்தரம் சிதம்பரம்**

இப்படிக் கோயில்களை அந்தந்தக் காலங்களில் வணங்கினால் பூரண பலன் கிடைக்கும். இந்த காலங்களில்தான் உற்சவ மூர்த்தியைப் பார்க்கும் பாக்கியம் கிடைக்கும். மற்றைய காலங்களில் மூலவரை மட்டும்தான் பார்க்கலாம். சிதம்பரம் மட்டும் இதற்கு விதிவிலக்கு. காரணம் மூலவரும் உற்சவரும் ஒருவரே.


தைப்பூசம் நடக்கிற மூன்று நாளும் தனிப்பட்ட வாகனங்கள் செல்லுவதற்கு முன் அனுமதி பெற வேண்டியது அவசியம். முன் அனுமதி பெற்றாலும் எந்தப் பக்கம் பார்த்தாலும் ஜனத்திரள், பால்காவடி, மஞ்சள் காவடி மற்றும் அலகுக் காவடி. இந்த வருடம் தைப்பூசத்துக்கு 20 லட்சம் பேர் வந்ததாக கணக்கிட்டிருக்கிறார்கள்.

அதன்பிறகு பழனியில் இருந்து கோயம்புத்தூருக்கு பேரூர் ஆதினத்தைப் பார்க்கச் சென்றோம். அவர் எங்களை இன்முகத்துடன் வரவேற்றார். அவரிடம் நானும் என் மனைவியும் பேசிக்கொண்டிருக்கும் போது இரண்டு டம்ளரில் ஒரு பானம் கொண்டுவந்து கொடுத்தார்கள். அந்தப் பானத்தைப் பார்த்து சொன்னார். இது கோயிலில் பூசை செய்கின்ற செம்பரத்தம் பூ. இந்த பூவைப் பொடியாக்கி பாலில் கரைத்துக் கொடுத்தால் கொலஸ்ட்ராலைக் குறைக்கும் என்று. இவரின் அன்புக்கு கைம்மாறு உண்டோ. அதன் பின் கோயம்புத்தூரில் இருந்து புறப்பட்டுத் திருச்சி வந்தோம். நாம் முதலில் சொன்னமாதிரிக் கோயில்களைத் தரிசிக்க நான் வரவில்லை. தலங்களைதான் தரிசிக்கிறேன். அந்த வகையில் மதுரை மீனாட்சி, திருப்பரங்குன்றத்தை தரிசித்தப் பின் தூத்துக்குடி வழியாக திருச்செந்தூர் சென்று நான் சேர்ந்தேன். திருச்செந்தூரில் நல்ல தரிசனம். சிவமுருகன் லாட்ஜில் தங்கியிருந்தேன். சிவமுருகன் லாட்ஜை சுற்றித் தமிழ் நாட்டுக் காவல் படை இருந்தது என்னவென்று புரியவில்லை. கந்தசஷ்டி காலங்களில் பெரும்பாலும் திருச்செந்தூரில் தங்கியிருக்கும் இலங்கையைச் சேர்ந்த திருக்குமரன் நடராசா அவர் மனைவியுடன் வந்து எட்டு லட்சத்துக்குரிய தங்கத்தால் ஆன மேலங்கியை நன்கொடையாகக் கொடுத்தார். அவரின் மனைவி ராஜபக்சேவின் உறவினராம். இதற்காகத் தமிழ்நாடு போலீஸ் பாதுகாப்பு கொடுத்தது. திருச்செந்தூரை முடித்துக் கொண்டு கன்னியாகுமரி போய் சூரிய அஸ்தமனத்தைப் பார்த்துவிட்டு திருச்சி வழியாகச் சென்னை வந்து சேர்ந்தோம். வரும் வழியில் பெரிய கோயில்கள் உண்டு. அதில் விசேடமாக மேல்மருவத்தூர் கோயில் திருச்சியிலிருந்து 200வது கிலோமீட்டரில் உள்ளது. நான் இந்த கோயிலுக்கு எந்த காலத்திலும் இறங்கிப் போனதில்லை. அதற்கு என்ன காரணம் என்று கேட்பார்கள். நான் முதன் முதலில் (1967) சென்னைக்கு வந்த போது மேல் மருவத்தூர் கோயில் ஒரு குடிசையாக இருந்தது. ஆனபடியால் ஸ்தலங்கள் கோயில்கள் என்ற வித்தியாசம் இப்போது புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். காரணம் கோயில்கள் இப்பொழுதும் போட்டி போட்டுக் கொண்டு வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே எல்லா கோயிலுக்கும் செல்வது கடினம்.

இப்படியான தல அனுபவம் இன்னும் பல உண்டு. அடுத்த இதழில் திருப்பதி தரிசன அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்

பதிப்பாசிரியர்














வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

ESTD 1992

# SRIKANTH & CO.

Solicitors & Property Business Centre

## Solicitors & Estate Agents

**Property Sales, Letting & Conveyancing Under One Roof**

We also practise in the following areas of LAW:

- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing - Commercial
- Londlord & Tenant
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

557 High Road, Wembley, Middlesex HA0 2DW

Tel : 020 8795 0648

Fax : 020 8795 0649 / Mob : 07831 195 979

லண்டனில்
பொற்கை வண்ணர்களின்
நிர்வாகத்தில்
இயங்கும்
ஒரே நகை மாடம்



Gems & Jewellery

# MIERRA

Jewellery Mart

34 London Road Tooting London SW 17 9HP
Tel : 020 8648 7750 Mobile : 07958948685
www.meera_jewellery.com

# CHANDRA

## Super Market & Off Licence

உங்களுக்குத் தேவையான சகல விதமான மளிகைப் பொருட்கள், இலங்கையிலும், இந்தியாவிலும் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப்பொருட்கள், கடல் உணவு வகைகள், மரக்கறி வகைகள், பழ வகைகள், மேல்நாட்டு குடிவகைகளுடன் இலங்கை பியர் வகைகளையும் சகாய விலையில் பெற்றுக்கொள்ள ஒரே இடம். ஆடியோ, வீடியோ, சீ.டி, வி.சீ.டி ஆகியவற்றை விற்பனைக்கும் வாடகைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.



Tel : 020 8333 8680
209 - 211 Bromley Road
Catford, London SE6 2PG

# SELECT

ESTATE LETTINGS

- Residential & Commercial Sales
- Professional Service
- Rent Guarantee Scheme
- Vetted Tenants
- In-house Maintenance Dept
- Competetive Sales Commission
- Business Transfer
- Mortgages Arranged even with no proof of income

Select the Best

*Sales*
*Mortgages*
*Lettings*

Tel : 020 8470 1500
Fax : 020 8470 9800
www.selhouses.co.uk
email : info@selhouses.co.uk

288 High Street North, Manor Park, London E12 6SA

**Anthoorium**
*World of Designs*
Jewellery & Textiles

For your Jewels, Gems, Sarees, Costumes, Musical Instruments & Gift Items please visit us...

102, B Burlington Road
New Malden, Surrey KT3 4NT
Tel : 020 8942 8001
Fax : 020 8942 8007
Web : www.anthoorium.co.uk
Email : sales@anthoorium.co.uk

**EVEREST**
Curry King
24 Loampit Hall
Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233

Breakfast
Lunch
Dinner

**Sea Food & Vegetarian Specialist**

புதிய பொலிவுடன் லூசியத்தில்
**கற்பகம்**
**KATPAGAM**

ஞாயிறு
தோறும் உடன்
பங்கு
ஆட்டிறைச்சி
சகலவிதமான
மரக்கறி
வகைகள்
பழவகைகள்
உட்பட
சகல
தேவைகளுக்கும்
நாடவேண்டிய
ஒரே இடம்

துரிதப் பணமாற்றுச் சேவை
ரஞ்சன
இலண்டன்

36, Loampit Hill, Lewisham
London SE 13 7SW
Tel / Fax : 020 8694 8810

**GJ Video Club**
TAMIL, HINDI, TELUGU, SINGALA
VHS VCD & DVD WHOLESALE & RETAIL
**Tel : 020 8471 6500**

ஜி ஜெ
விடியோ மாபெரும்
கிருஸ்துமஸ்
மலிவு
விற்பனை

ஒன்று வாங்கினால்
மற்றது ½ விலை

By One get
One ½ Rate

**317, High Street North**
**ManorPark London E12 6SL**

**home2u**
ESTATE AGENTS LEWISHAM
Formally known as
**Shelter 4U**

sales
lettings &
property management
mortgages

வீடுகள் வாங்க, விற்க, சிறந்த
பராமரிப்போடு வீடு வாடகைக்கு விட அணுகுங்கள்
வீடு வாங்க வசதிகள் செய்து தரப்படும்

K. Vinotharan B.Eng.
Director
83 Ladywell Road
Lewisham
London SE13 7JA

Tel : 020 8690 5000
Mob : 07949 026 917
Fax : 020 8314 1111
info@home2u.co.uk
vino@shelor4u.co.uk
www.home2u.co.uk

புதிய நிர்வாகத்தின் கீழ்
*Maharasie Jewellers*
மங்கையரின் மனங்களைக்
கொள்ளை கொள்ளும்
நவநாகரீக நகைகளின்
தங்கச் சுரங்கம்
122 Loampit Vale
Lewisham
London SE13 7SN
Tel : 020 8691 8888

**Video Audio**
14 Lompait Hill
Lewisham
London SE13
Tamil, Malayalam, Hindi,
Telugu Films, Tele Drama
Devotional Carnatic,
Classical Cd's
Tamil Magazines,
News Papers, Phone Cards


Goldmaa
அவித்த
கோதுமை மா
கோதுமை
ஆட்டா
குரக்கன் மா
விரைவில்


உலகின் எப்பாகத்துக்கும்
உங்கள் பணம்
பாதுகாப்பாக சென்றடைய
Eastham
ஸ்ரேசனுக்கு எதிரில்
உடனே எம்மை அழையுங்கள்
A1 MONEY TRANSFER
7 Station Pride East Ham E6 1JD
தொடர்பு - நிரஞ்சன்
Tel : 0208 503 5446
Mob : 07961406289



# Arthy
## Jewellers

ஆயிரங்காலத்துப் பயிருக்
ஆண்டாண்டு பாரம்பரிய
உள்ள தங்க நகைகள்

294 High Street North
Eastham, London E12 6SA
Tel : 020 8552 1080

திங்கள் அன்று விடுமுறை

# BEST FOOD

| BEST FOOD Supermarket | BEST FOOD Supermarket | BEST FOOD Supermarket |
| --- | --- | --- |
| 259 - 261, London Road | 249 Northolt Road | 364 - 366, Bath Road |
| West Croydon | Harrow | Hounslow |
| Surrey CRO 2RL | Middlesex HA2 8HR | Middlesex TW4 7KT |
| Tel : 020 8684 6269 | Tel : 020 8423 9933 | Tel : 020 8577 6002 |
| Fax : 020 8686 4577 | | Fax : 020 8570 2323 |



# MITHUS
Jewellery

322-324 London Road
Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756
Fax : 020 8683 1792

# DIAMONDS
Palace

76 Tooting High Street
London SW17 ORN
Tel : 020 8767 5333
Fax : 020 8767 5814

# Sindu Mahal

இப்போது எங்கள் சேவையை விரிவாக்கியுள்ளோம்



திருமணமா !
பூப்புனித நீராட்டு விழாவா !
பிறந்த நாள் விழாவா !
எந்த விழாவையும்
சிறப்பாக
நடத்தித்தர காத்திருக்கிறோம்

274 Barking Road Eastham
London E6 3BA
Tel : 020 8471 6226
Mob : 07984 423 284 07830 361 317
07951 418 145